Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | ஆனி -32 | 16-07-2005 | சனிக்கிழமை | ஓசை 148



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12150)

-விடுதலைப்புலிகளின் பாதுகாப்பான போக்குவரத்து-

# விரைவில் அரசின் நடவடிக்கை தேவை

# இன்றேல் எமது வழிமுறையில் செல்வோம்!

## கண்காணிப்புக் குழுவுக்கான கடிதத்தில் சு.ப.தமிழ்ச்செல்வன் அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் மீதும் சீற்றம்

(கிளிநொச்சி)

**எமது முன்னைய யோசனைகளை(30.06.2005 கடிதத்தில் குறிப்பிட்டுள்ள) முழுமையாக ஏற்றுக்கொண்டு கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். மாறாக மேலும் காலதாமதங்கள் ஏற்படுமானால் நாம் ஏற்கனவே கூறியதைப் போன்று எமக்கே உரிய பாதுகாப்பான பயண வழிமுறைகளை கைக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றோம் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவருக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

இதேவேளை அரசின் சார்பில் சிறிலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் குறித்தும் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமது சீற் றத்தை வெளிப்படுத்தியுள்ளார். அரசியல்துறைப் பொறுப்பாளர் நேற்று போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் விபரம் வருமாறு:

(02 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புநகரப் பாதுகாப்பு நேற்றிலிருந்து அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் அரசாங்க அச்சகம் உட்பட அரச கட்டடங்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று நள்ளிரவு முதல் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அறிவித்தல் விடுக்கப்பட இருப்பதே காரணம் என ஒரு தரப்பினர் ஊகம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் தாக்குதல்; அக்கரைப்பற்றில் மூவர் பலி!

அக்கரைப்பற்றில் இருந்து அம்பாறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டி மீது வானில் வந்தவர்கள் நடத்திய துப்பாக்கித் தாக்குதலில் அதில் பயணம் செய்த மூவர் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று முன்தினமிரவு 10:30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அந்த இடத்திலேயே மூவரும் கொல்லப்பட்டதுடன் அவர்கள் பயணம் செய்த முச்சக்கர வண்டியும் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி பொதுக்கட்டமைப்பின் பற்கள் பிடுங்கப்பட்டுவிட்டன

விமல் வீரவன்ச கருத்து

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவினால் சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு அதன் செயற்பாடுகள் அனைத்தும் இழந்த நிலையில் அதன் பற்கள் பிடுங்கப்பட்டு பெயரளவில் மாத்திரமே அது உள்ளதாக ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமயவும் உயர் நீதிமன்றில் தொடுத்த வழக்கு விசாரணையின்போது பொதுக் கட்டமைப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்ததன் பின்னர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே விமல் வீரவன்ச இவ்வாறு கூறினார்.அவர் அங்கு மேலும் கூறுகையில்; இந்த நீதிமன்றத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றம் இடைக்கால தடைவிதிப்பு

விசாரணை செப்-12 இற்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பிற்கெதிராக சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் நேற்றுஇடைக்கால தடை பிறப்பித்துள்ளது. சிறிலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து ஏற்படுத்தியுள்ள ஆழிப்பேரலை முகாமைத்துவ கட்டமைப்பு சட்டவிரோதமானது அல்ல என்றும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. ஆழிப்பேரலை முகாமைத்துவ கட்டமைப்பை தடை செய்யுமாறு கோரி ஜே.வி.பி. தாக்கல் செய்த வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான நீதிபதிகள் முன்னிலையில் நடைபெற்றது.


இந்த விசாரணையின் முடிவில் ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பின் நான்கு அம்சங்களுக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவினை விதித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கோ அல்லது அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கோ நீதிமன்றம் தடைவிதிக்க முடியாது என்றும் இதில் எந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எமது மக்களின் விடுதலையும் நல்வாழ்வும் சிங்களவர்களின் கருணையால் விளையப்போவதில்லை

## லெப்.சீலன் நினைவுநாள் நிகழ்வில் பொட்டம்மான்



(அலுவலக செய்தியாளர்)

இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு திருப்பத்தில்-நாளை என்ன நடக்கும் என்ற வினாவின் நிலையிலே நிற்பதை நாம் அறிவோம். எங்கள் விடுதலை என்பதும் எங்கள் மக்களின் நல்ல வாழ்வென்பதும் சிங்களவர்களின் கருணையினாலோ அல்லது சிறிலங்கா அரசின் பெருந்தன்மையினாலோ விளையப் போவதில்லை என்பதை என்றும் எம்மால் உறுதியாக கூற முடியும். இன்றைய நிலையில் சிங்கள அரசாங்கம் போரைத் தொடக்கும் பழியை எங்கள் தலையில் போடும் வகையில் காரியங்களை ஆற்றி வருகிறது. இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டம்மான் அவர்கள் தெரிவித்துள்ளார்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் நேற்று இயக்கச்சியில் நடைபெற்ற

(02 ஆம் பக்கம் பார்க்க)



# விரைவில்...

11 யூலை 2005 எனத் திகதியிட்டு இதுவிடயம் தொடர்பாக நீங்கள் சிறிலங்கா சமாதானச் செயலகத்தினது கடிதத்தினையும் இணைத்து அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் இக்கடிதம் எழுதப்படுகிறது.

சிறிலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டினை தங்களுக்கு நாம் விளக்க விரும்புவதோடு எமது போராளிகளின் பாதுகாப்பான பயண ஒழுங்குகள் தொடர்பான எமது தெளிவான நிலைப்பாட்டை நாம் மீள வலியுறுத்த விரும்புகிறோம்.

"மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசு என்ற வகையில் தாங்கள் கால வரையரைகளை ஏற்றுச் செயற்படுவதில்லை" என சமாதானச் செயலகப் பணிப்பாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். உண்மை யாதெனில், கால வரையறைகளின் அடிப்படையில்தான் போர் நிறுத்த ஒப்பந்தமே வரையப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவுபடுத்த விரும்புகிறோம். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நாளிலிருந்து குறிப்பிட்ட, நாட்களுக்குள் வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், மக்கள் வாழும் இடங்கள் மற்றும் பொது இடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் விலகி மக்களின் இயல்பு வாழ்வுக்கு வழிகோலவேண்டும் எனக்கூறும் போர் நிறுத்த ஒப்பந்தம் காலவரையறைகளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. இத்தீவில் இரண்டு அதிகார மையங்கள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டு இரு அதிகார மையங்களும் தத்தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வைத்துள்ளன என்ற உண்மையின் அடிப்படையிலேயே போர் நிறுத்த ஒப்பந்தம் வரையப்பட்டது என்பதை சிறிலங்கா சமாதானச் செயலகப்பணிப்பாளருக்கு இவ்விடத்தில் நாம் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

போர்நிறுத்த ஒப்பந்த விதிமுறைப்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபடும் ஆயுதம் தரிக்காத போராளிகளினது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத்திற்கே உண்டு. இந்த யதார்த்த நிலையை நிராகரித்துச் செயற்படுவதானது போர் நிறுத்த சூழல் குழம்பிப்போவதற்கே வழிவகுக்கும். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் நோர்வே தூதரகம் என்பவற்றின் அனுசரணையுடன் இருதரப்பினருக்குமிடையில் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில்தான் கடந்த மூன்றரை வருடங்களாக எமது போராளிகளினது பாதுகாப்பான பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வாறாக சுமுகமாக இடம்பெற்று வந்த போக்குவரத்துக்கான வழித்துணையில் சர்ச்சையைக் கிளப்பி சமாதான சூழ்நிலையைக் குழப்புவது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இருப்பையே ஆட்டங்காணச் செய்கிறது. சிறிலங்கா அரசாங்கமும் அதன் இராணுவ மற்றும் புலனாய்வு அமைப்புகளும் சமாதான சூழலைக் கேள்விக்குறியாக்கி தமிழர் தேசம் மீது மீண்டும் போரைத் திணிக்கும் ஓர் உத்தியாகவே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்களோ என்ற சந்தேகம் எமது மனங்களில் எழுகிறது.

எமது விடுதலை அமைப்பின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டமையினால் கருணாவை அமைப்பிலிருந்து நீக்கி எமது அமைப்பின் தலைமை ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்திருந்தது. இவ்வாறாக, அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒருவரை இன்று இராணுவம் பூரண பாதுகாப்பினை வழங்கி பாதுகாத்து வைத்திருப்பதோடு அவரது பெயரில் கருணா குழுவென இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே செயற்பட்டு வருவது யாவரும் அறிந்த உண்மை. எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்திலோ அல்லது தமிழர் தாயகப்பகுதியிலோ ஏதாவதொரு நிலப்பரப்பை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் குழுவாக கருணா குழு இயங்கவில்லை. அவரை இராணுவமே முழுமையாகப் பயன்படுத்தி வருவதோடு இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பாதுகாப்பில்தான் அவர் இருக்கிறார் என்பது வெளிப்படையான உண்மை.

கடந்த மூன்றரை வருடங்களாகத் தொடர்ந்து வருகின்ற சமாதான சூழலை சிதைப்பதற்கான ஒரு பொறிமுறையாகவே இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் திட்டமிட்ட ரீதியில் கருணாகுழு என்ற பெயரில் இக்குழு உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுவருகிறது. இதனை நாம் பலமுறை ஆதாரங்களுடன் உங்களுக்குச் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். தேவையேற்படும் பட்சத்தில் இதனை உறுதிப்படுத்தும் வகையில் மேலதிக தகவல்களை நாம் உங்களுக்கு வழங்கவும் தயாராக உள்ளோம்.

வடக்குக் கிழக்கில் இயங்கிவருகின்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு, இக்குழுவினர் எமது தாயகப்பிரதேசப் பகுதிகளிலிருந்து முற்றாக அகற்றப்படவேண்டும் என்பதே போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.8 இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதற்குப் பெரும் அச்சுறுத்தலாக இந்த ஆயுதக்குழுக்கள் அமைந்துவிடும் என்பதுடன், சமாதான சூழலைக் குழப்பும் நோக்கில் அவை செயற்பட்டுவிடும் என்பதையும் நோர்வே அனுசரணையாளர்களும், சிறிலங்கா அரசாங்கமும் ஏற்றுக்கொண்ட பின்னர்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் சரத்து 1.8 சேர்க்கப்பட்டது. அவ்வாறிருந்தும், இன்று இப்படியானதோர் ஆயுதக்குழுவைப் படைத்தரப்பே உருவாக்கி பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதோடு எமது போராளிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். கடந்த மூன்றரை வருடங்களாகக் கட்டியெழுப்பப்பட்டுவந்த சமாதான சூழலைச் சீர்குலைக்கின்ற, அதேநேரம் நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்த சூழலைக் குழப்புகின்ற நடவடிக்கையாகத்தான் இராணுவப் புலனாய்வுப் பிரிவினதும் படைத்தரப்பினரதும் செயற்பாட்டை நாம் கருதுகிறோம்.

கடந்த யூன் 26ஆம் நாள் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதல், எமது மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மீதான தாக்குதல், மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதி மீதான தாக்குதல் மற்றும் கடந்த 10ஆம் திகதி அன்று திருமலையில் இடம்பெற்ற தாக்குதல் என எமது போராளிகள் மீதான அனைத்துத் தாக்குதல்களும் சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்தான் இடம்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இச்சம்பவங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்ட விதம், நடாத்தப்பட்ட இடம் மற்றும் ஏனைய காரணங்களை வைத்து நோக்கும்போது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் சிறிலங்கா படையினருமே இவ்வனைத்துத் தாக்குதல் சம்பவங்களிலும் ஈடுபட்டுள்ளமை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது.

சிறிலங்கா சமாதான செயலகப் பணிப்பாளரின் கடிதத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் நிலவிய போர்ச் சூழலில் இடம்பெற்ற சம்பவங்களையெல்லாம் சுட்டிக் காட்டியுள்ளார். இரண்டு தரப்பினருக்கிடையேயும் போர் நடைபெற்ற காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை இரண்டு தரப்பினரும் சமாதான முன்னெடுப்புக்களில் ஈடுபட்டுள்ள இந்த சமாதான சூழலில் சுட்டிக்காட்டுவதும் விவாதிப்பதும் சிறந்ததல்ல என்பதோடு அது ஒப்பந்தத்திற்கு விரோதமானதோர் நடவடிக்கையாகவே நோக்கப்படுகிறது. அவ்வாறானால், யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் சிறிலங்காப் படைத்தரப்பினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழ் மக்கள் மீதான வன்முறைகள், சிறிலங்கா படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதப் படுகொலைகள் என அனைத்தையுமே நாம் சுட்டிக் காட்டவேண்டிவரும். போர் நிறுத்த ஒப்பந்த விதிகளை நாம் சரியாகக் கடைப்பிடித்து நடப்பதால்தான் சிறிலங்கா கட்டுப்பாட்டுப் பகுதிகளினுள் அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள எமது போராளிகள் மீது சிறிலங்கா படையினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளின்படி, சிறிலங்கா கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களின்றி அரசியல் பணிபுரியும் போராளிகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத்திற்கு உண்டு. அதேநேரம் இவ்வாறாக எமது போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதைக் கண்காணிப்பது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின்ரின் கடமையாகும். இதுபோன்றே எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வரும் சிறிலங்கா பிரதிநிதிகளினதும் சிறிலங்கா அதிகாரிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு எமக்குண்டு.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு, எமது போராளிகள் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சந்திப்பதற்கு பிற மாவட்டங்களுக்குச் சென்றுவரவேண்டிய தேவையுள்ளது. அத்துடன் அரசியல் மற்றும் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டுள்ள எமது போராளிகள் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் மற்றும் சந்திப்புக்களை மேற்கொள்வதற்காக அடிக்கடி கிளிநொச்சிக்கு வந்துசெல்லவேண்டிய தேவையுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர்கூட போராளிகளின் இவ்வாறான பயணங்கள் எமக்கேயுரிய பிரத்தியேக வழிமுறைகளினூடாக சுமுகமாக இடம்பெற்று வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் இவ்வாறான எமது போராளிகளின் பயணங்களை போருக்குத் தயார்படுத்துவதற்கான பயணங்கள் என்றும் வன்முறையைத்தூண்டுவதற்கான நடவடிக்கைகள் என்றும் கூறி, சிறிலங்கா தரப்பினர் தேவையற்ற மாயையைத் தோற்றுவிக்க முயல்வது வருந்தத்தக்கது.

மேற்குறிப்பிட்டது போல, மிகவும் அவசியமானதும் தேவையானதுமான எமது போராளிகளினது பாதுகாப்பான பயணங்களை உறுதிப்படுத்தும் வகையிலேயே கடந்த 30 யூன் 2005 அன்று அனுப்பிய கடிதத்தில் சில யோசனைகளை நாம் முன்வைத்திருந்தோம். எமது போராளிகளின் பூரண பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால் எமது யோசனைகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். நீண்ட நாட்களாக பயணங்கள் ஒழுங்குபடுத்தப்படாத நிலையில், எமது பயணங்களை மிக அவசரமாக ஒழுங்குபடுத்த வேண்டியநிலை எமக்கு இருந்தமையினாலேயே நாம் ஓர் கால அவகாசத்தினை சிறிலங்கா தரப்பினருக்கு வழங்கியிருந்தோம். மாதத்தில் ஒருதடவைதான் பயணம் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், பயணத்தின் போது குறிப்பிட்ட தொகைப் போராளிகள் மாத்திரமே பயணம் செய்யவேண்டும் என்றும் சிறிலங்கா தரப்பினர் கட்டுப்பாடுகளைப் போடுவதை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். இதுவிடயத்தில் சிறிலங்கா தரப்பினரின் யோசனையானது ஏதோ ஒருவகையில் எமது போராளிகளின் பாதுகாப்பான பயணம் முடக்கப்படுவதற்கே வழிவகுக்கும் ஒன்றாகவே எமக்குத் தெரிகிறது.

ஆகையால், நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் தீர ஆராய்ந்து எமது போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நாம் கடந்த யூன் 30 2005 அன்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்ட யோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு கூடிய விரைவில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நாம் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறாக நடவடிக்கைகளை எடுப்பதில் மேலும் கால தாமதங்கள் ஏற்படுமானால் நாம் ஏற்கனவே கூறியதைப் போன்று எமக்கேயுரிய பாதுகாப்பான பயண வழிமுறைகளைக் கைக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதை உறுதியுடன் கூறிக்கொள்கிறோம். அவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால் சிறிலங்காதரப்பினர் எமது பாதுகாப்புடன் கூடிய போராளிகளினது பயணங்களைத் தடுக்காது இருக்கவேண்டும். மாறாக தடுக்கும் நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில் நாம் அதற்கான தகுந்த பதில் நடவடிக்கையை எடுக்கவேண்டிய சூழ்நிலையை உருவாக்கும். இந்நிலைமை யுத்த நிறுத்த உடன்படிக்கையை மிகவும் சிக்கலான நிலைமைக்குள் தள்ளிவிடும் என்று நாம் அஞ்சுகின்றோம். (லோ, தீ)

# எமது...

தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் தாக்குதல் தளபதியாக இருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். சீலன் அவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

லெப்டினன் சீலன் அவர்களின் 22ஆவது நினைவு நாள் எங்கள் விடுதலைப்போராட்டத்தில் பல்வேறு தாக்கங்களை நிகழ்த்திய பெரு வெற்றிகளைப் பெற்றுத் தந்த வெற்றிக் களங்களை கண்ட ஒரு படையணியின் எழுச்சி நாளாகவும் இங்கு திகழ்கின்றது.

இந்த வேளையில் எமது விடுதலைப்போராட்டம் எத்தகைய ஒரு தளபதியைக் கொண்டிருந்தது. விடுதலைப்போராட்டத்தின் ஆரம்ப நாட்களிலே எமது தலைவருக்கு எதிராக நிகழ்ந்த பல்வேறு சதிகளை வெல்வதற்கு அந்தத் தளபதி எவ்வளவு முனைப்புடன் செயற்பட்டார். தலைவரின் கரங்களை பலப்படுத்துவதில் எவ்வளவு உறுதியுடன் நின்றார் என்பன பற்றிய கருத்துக்களை உங்களுடன் பகிரலாம் என்று நினைக்கிறேன்.

அண்மையில் எமது விடுதலைப்பேராட்டம் சந்தித்த மிகக் கசப்பான பக்கங்களான துரோகங்கள் பற்றிய விடயங்களை கதைத்துக் கொண்டிருக்கும் வேளையில் எங்கள் தலைவர் அவர்கள் கூறினார்:"இன்று நாம் கருணா என்ற துரோகியின் பக்கத்தைப் பார்க்கின்றோம். இந்தத் துரோகங்களுக்கெல்லாம் சிகரம் வைத்த, இதை விடக் கூடுதலான துரோகத்தைக் கடந்து வந்த தனது அனுபவத்தைக் கூறினார். அப்போது அவர் சொன்னார்."இன்று விடுதலைப்போராட்டம் வளர்ச்சியடைந்த நிலையில் எமது இயக்கம் ஒரு மரபு வழி இராணுவமாக முதிர்ச்சி அடைந்துள்ளது. நாம் முழுத் தாயகத்திலும் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாகவும், அங்கீகரிக்கப்பட்டு வளர்ச்சியடைந்த நிலைமை காணப்படுகிறது. ஆனால், வளர்ச்சியினையே சந்தித்திராத விடுதலைப் போராட்டம் முகிழ்த்துக் கொண்டிருந்த காலத்தில் துரோகங்கள் நிகழ்ந்தன. அன்று அந்தத் துரோகங்கள் வெற்றி பெற்றிருந்தால் முழு விடுதலைப்போராட்டமும் அழிந்திருக்கும் வாய்ப்பிருந்தது. ஆனால் இன்று துரோகங்கள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு வேண்டுமானால் இருக்கலாமே தவிர அந்தத் துரோகத்தை எதிர் கொள்வதற்கும், வெல்வதற்குமான வலிமையை எமது இயக்கம் பெற்றுள்ளது. எங்கள் பலம் நிருபிக்கப்படாத காலத்தில், மக்கள் மத்தியில் விடுதலைப் போராட்டம் நம்பிக்கையை ஏற்படுத்தாத காலத்தில் நிகழ்ந்த - சந்தித்த துரோகங்கள், முழு இயக்கத்தையும் விடுதலைப் பேராட்டத்தையும் இல்லாமல் செய்து விடும் நிலைமையைக் கொண்டிருந்தது.

அந்த வேளையில் தலைமையின் மீதும் விடுதலையின் மீதும் அவாக்கொண்டு கைகொடுத்த - தோள் கொடுத்த ஒருவனாக நான் சீலனைப் பார்ப்பேன்" என்று கூறினார்.

விடுதலைப்போராட்டம் பரவலாக மக்கள் மத்தியில் பெருத்த நம்பிக்கைகளை ஏற்படுத்தியிராத காலத்தில் தனி மனிதர்களாக சிலர் இணைந்து செயற்பட்டனர். அப்போது விடுதலைப்போராட்டத்திற்கு உள்ளேயே துரோகங்கள் சார்ந்த அவ நம்பிக்கைகள் வந்த வேளையில் துரோகத்தை எதிர்க்கத் துணியாமல் பலரும் ஒதுங்க முற்பட்ட வேளையில், சீலன் தலைவர் அவர்களுக்கு தோள் கொடுத்த உறுதிதான் இன்று எமது விடுதலைப் போராட்டமாக வளர்ந்து நிற்பதை நாம் காண்கின்றோம்.'

நான் நினைக்கிறேன் தலைவர் அவர்கள் முதலாவது படைப்பிரிவை சாள்ஸ் அன்ரனியின் பெயரிலே உருவாக்கும் அளவிற்கு சாள்ஸ் அன்ரனியின் உணர்வை தன் இதயத்திலே வைத்திருந்தார் என்று கூறினால், அது தனியே சாள்ஸ் அன்ரனியின் இராணுவத்திறனுக்காக மட்டுமாக இருக்காதோ என்ற எண்ணம் எனக்கு ஏற்படும். அதற்காக சாள்ஸ் அன்ரனி இராணுவத் திறனிலே குறைந்தவரல்ல. அது பற்றி எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் அதற்கும் மேலாக விடுதலைப் போராட்டம் அழிந்து விடக்கூடிய நிலையில், நம்பியவர்கள் கைவிட்ட நிலையில், தலைவருக்கு உறுதியாக தோள் கொடுப்பவராக சாள்ஸ் அன்ரனி நின்றார். அந்த வேளையில் அவர் கொடுத்த உணர்வின் பலம் தலைவர் அவர்களைச் சோர்ந்துபோக விடாமல் விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்தும் செயற்படுவதற்கும் அல்லது தலைவரை துரோகிகள் அழிந்து விடாமல் பாதுகாப்புக் கவசமாக நின்று, இந்த விடுதலைப்போராட்டத்தை, உலகம் வியக்கும் வரலாற்றைப் படைக்கின்ற நிலைக்கு எமது போராட்டத்தைப் பாதுகாத்த உணர்வின் காரணமாக, சாள்ஸ் அன்ரனி என்ற பெயரில் படைப் பிரிவை ஆரம்பித்திருப்பார் என்று நான் நினைக்கின்றேன்.

இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு திருப்பம் அல்லது கேள்வி அல்லது நாளை என்ன நடக்கும் என்ற வினாவின் நிலையிலே நிற்பதை நாம் அறிவோம். நாளை நடக்கப் போவதை யாரும் அறியார். ஆனால், நாளை மட்டுமல்ல, அதற்கு மறுநாளும் அதற்கு மறு நாளுக்கும் மறு நாளும் நடக்கப்போவதை எம்மால் கூறமுடியும். அது என்னவென்றால் எமது விடுதலை என்பது அல்லது எங்கள் மக்களின் நல்ல வாழ்வென்பது சிங்களவர்களின் கருணையினாலோ, சிறிலங்கா அரசின் பெருந்தன்மையினாலோ விளையப்போவதில்லை என்பதை இன்றும் நாளையும் அதற்கு மறுநாளும் உறுதியாக எம்மால் கூறமுடியும் ஒன்றாகவே இருக்கும்.

எமது பலம் - தமிழர்களின் பலம் - அந்தப் பலமே எமக்குரிய விடுதலையை, எமது மக்களுக்குரிய நல்வாழ்வை பெற்றுத் தரும் என்பதே நாம் என்றென்றும் மனதில் வைக்க வேண்டிய உறுதியான செய்தி.

நாளை யுத்தம் வெடிக்கலாம் அல்லது ஒருவாரம் செல்லலாம் அல்லது உடனடியாகவே அதற்குரிய சூழல்கள் நிகழலாம். அரசியல் போக்குகள் எவ்வாறும் அமையலாம். இன்றைய அரசியல் சூழலை அனைவரும் அறியும் ஆர்வத்தில் இருப்பீர்கள். அந்த அரசியல் சூழல் ஒன்றே ஒன்றுதான். இதை நேரடியாக கூறுவதாக இருந்தால் சிங்கள அரசாங்கம் போரைத் தொடங்கும் பழியை எமது தலையில் போடும் வகையில் காரியங்களை ஆற்றிவருகிறது. சிறிலங்காப் படையினர் நேரடியாகவே ஈடுபட்டு காய்களை நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள்.

எவ்வாறாயினும், எங்களைச் சீண்டி யுத்தத்துக்கான அறிவித்தலை நாங்கள் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் அவர்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதுதான் நேரடியாகச் சொல்லக்கூடியது.

இதைவிடச் சொல்வதானால், பொதுவான கடிதப் போக்குவரத்துக்கள். இவை வெறுமனே சம்பிரதாயத்துக்காக நிகழ்பவை, முடிவுகள் நிகழ்வுகளை வைத்து தீர்மானிக்கப்படும். நிகழ்வுகளைப் பொறுத்த வரையில் எதிரி நிகழ்வுகளுக்காக நகர்வுகளை செய்து கொண்டிருக்கிறான் என்பதை மட்டும் நான் உங்களுக்கு கூறமுடியும்.

யுத்தம் எந்த வேளையிலும் எந்தக் கணத்திலும் வெடிப்பதற்கான நிகழ்வு நடக்கக்கூடும். அந்த வகையில் எம்மை இராணுவ ரீதியில் பலப்படுத்தி உண்மையான பலத்தை நாங்கள் எமது செயலாற்றலின் மூலம் வெளிப்படுத்தும் அந்த நாளிற்காக காத்திருக்க வேண்டியதே இன்று நாம் செய்ய வேண்டியது.

எங்களுக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு அவகாசத்தையும் எம்மை பலப்படுத்துவதன் மூலம் நாம் எமது விடுதலை இயக்கத்தை பலப்படுத்துகின்றோம். இயக்கத்தை பலப்படுத்துவதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தையும் தமிழ்த் தேசியத்தையும் பலப்படுத்துகிறோம். அந்தப் பலமே எமக்கு விடுதலையைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையுடன் அந்தப் பலத்தை பெருக்கிக் கொள்வதில் காலத்தை பயனுள்ளதாக்குவோம். அதுவே சீலனின் அன்றைய கனவுக்கான நல்ல கடனாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

(லோ)

# தீவிரவாதிகளின் தாக்குதலை தடுக்க இத்தாலியில் 174 பேர் பொலிசாரால் கைது

(ரோம்)

**இத்தாலியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதை தடுக்க நாடு முழுவதும் சோதனை நடத்திய பொலிசார் 174 பேரை கைது செய்துள்ளனர்.**

கடந்த ஏழாம் திகதி லண்டனில் நடந்த தொடர் குண்டுவெடிப்புகளின் போது அதற்குப் பொறுப்பேற்ற அல்-ஹைதாவின் துணை அமைப்பு ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து அமெரிக்கா மற்றும் அதன் தோழமை நாடுகளின் இராணுவம் வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் இது போன்ற தாக்குதல்கள் தொடரும் என்று எச்சரித்திருந்தது.

ஏற்கனவே அமெரிக்காவை ஆதரித்து ஈராக்குக்கு இராணுவத்தை அனுப்பிய ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் அடுத்து தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற பயம் இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது. . ஏற்கனவே பலமுறை இத்தாலிக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் வந்துள் ளன. சமீபத்தில் வந்த வெடி குண்டு மிரட்டலால் ரோம் நகர விமான நிலையம் ஒரு வீதி ஒரு வங்கி அலுவலகம் ஆகியவை காலி செய்யப் பட்டன.

இந்தநிலையில் தாக்குதலைத் தடுப்பதற்காக முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதையொட்டி மிலன், ரோம் டுரின் நேப்பிள்ஸ் உட்பட பல நகரங்களில் உள்ள 201 வீடுகளில் சோதனை நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி சோதனையும் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது 174 பேர் கைது செய்யப்பட்டனர்.



கடந்த புதனன்று பாகிஸ்தானின் கராச்சி நகருக்கு 375. கி.மீற்றர் தொலைவில் கொட்கியில் நடைபெற்ற ரயில் விபத்தில் பலியானவர்களின் இறுதியஞ்சலியின் போது வழிபாடு நடத்தும் மக்கள்.

## இரண்டு ரயில் ஒன்றுடன் ஒன்று மோதல் தென்னாபிரிக்காவில் 162 பேர் காயம்

(ஜோஹனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் ஜோஹனஸ்பேர்க் நகருக்கு வெளியே உள்ள சோபெட்டொ ரயில் நிலையத்தில் இரண்டு ரயில்கள் மோதிக் கொண்டதில் அதில் பயணம் செய்த 162 பேர் காயமடைந்தனர்.

பிளாட் பாரம் அருகே நின்று கொண்டிருந்த ரயில் மீது இன்னொரு ரயில் மோதியது. இந்த விபத்துக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை.



அண்மையில் லண்டனில் நடந்த தொடர் குண்டு வெடிப்பையடுத்து 40 மைல்களுக்கு அப்பாலுள்ள ஐஸ்பரி நகர வீடு ஒன்றை சோதனையிடும் பொலிசார். [ஒக்ஸ் போர்ட் நகரமும் சோதனையிடப்பட்ட போதும் எவரும் கைது செய்யப்படவில்லை. இந்த வீடு ஏன் சோதனையிடப்படுகின்றது என்பதற்கான காரணமும் பொலிசார் தெரிவிக்கவில்லை]

## தீவிரவாதத் தலைவரை தேடி லண்டன் பொலிசார் பாக். பயணம்


(லண்டன்)

லண்டன் மனித வெடிகுண்டுத் தாக்குதலை நடத்திய அல்-ஹைய்தா தீவிரவாதியின் படத்தை லண்டன் பொலிசார் வெளியிட்டுள்ளனர்.

இந்த தீவிரவாதிகள் அனைவரும் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள். இந்த தாக்குதலுக்கு மூளையாக இருந்து செயற்பட்டவரும் பாகிஸ்தானை சேர்ந்தவர்தான். அவர் லண்டனில் இருந்து தப்பி ஓடினர். அவர் பாகிஸ்தானுக்கு சென்றாரா அல்லது வேறு நாட்டுக்கு சென்றுவிட்டாரா என்பது பற்றி பொலிசாருக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இதுபற்றி விசாரிக்கவும் அவரைப் பிடிக்கவும் லண்டன் பொலிசார் பாகிஸ்தான் விரைகிறார்கள்.

பலியான தீவிரவாதிகளில் ஒருவரான முகமது சாதிக்கான் இந்தியப் பெண் ஹசினாவை மணந்தவர் எனவும் ஆனால் சில ஆண்டு அவர்கள் பிரிந்து வாழ்ந்து வந்ததாகவும். அவரது மாமியாருக்கு சமீபத்தில் சிறந்த சமூக சேவைக்கான இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் விருது வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது..



பாக்தாத்தில் நேற்று அமெரிக்கத் தொடரணி மீது நடத்தப்பட்ட தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலில் சேதமான பகுதிகளை ஆராயும் அமெரிக்கப் படையினா். (சம்பவத்தில் எவரும் காயப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது)

# பாகிஸ்தான் ரயில் விபத்திற்கு சீன இயந்திரமா? சதியா?

## பாக். அதிகாரிகள் மத்தியில் குழப்பம்

(இஸ்லாமபாத்)

'பாகிஸ்தானில் நடந்த பயங்கர ரயில் விபத்தில் சதி வேலை இல்லை' என்று அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறினாலும. இதில் சர்ச்சை எழுந்துள்ளது. சீனாவில் இருந்து இறங்குமதி செய்யப்பட்ட ரயில் இயந்திரங்கள் சரியில்லாததால் விபத்து நடந்தது' என்ற புகாரும் எழுந்துள்ளது.



பாகிஸ்தானில் சர்ஹத் ரயில் நிலையத்தில் நின்றிருந்த ரயில் மீது இன்னொரு பயணிகள் ரயில் மோதியது. இதில் ரயில் பெட்டிகள் பக்கத்து தண்டவாளத்தில் விழுந்தன அந்த வழியில் வந்த மற்றொரு ரயில் பக்கத்து தண்டவாளத்தில் கிடந்த பெட்டிகள் மீது மோதி விபத்துக் குள்ளானது. இந்த விபத்தில் 200இற்கும் மேற்பட்டோர் பலியாயினர். ஆனால் 133 பேரே பலியானதாக பாக். நிர்வாகம் அதிகாரபூர்வமாகத் தகவல் வெளியிட்டது.

இந்த ரயில் விபத்துக்கு சதி வேலை எதுவும் காரணம் இல்லை. ஊழியர்களின் அலட்சியமே காரணம் என்று கூறினார் அதிபர் முஷராப் விபத்து குறித்து விரிவான விசாரணைக்கும் உத்தரவிட்டார் இந்தநிலையில் ரயில் விபத்துக்குப் பின்னணியில் சதி இருப்பதாகப் புகார் எழுந்துள்ளது. ரயில்வே அதிகாரிகள் கூறுகையில் சர்ஹத் ரயில் நிலை யத்தில் குவெட்டா எக்ஸ்பிரஸ் அதிவேக ரயில் நின்றிருப்பதைக் கவனிக்காமலும் சிவப்பு சமிக்ஞையை மதிக்காமலும் கராச்சி எக்ஸ்பிரஸ் ஓட்டுநர் ரயிலை வேகமாக கொண்டு வந்துள்ளார் அதனால் விபத்து ஏற்பட்டது.

ஆனால் மூன்று ரயில் ஒரே இடத்தில் விபத்துக்கு உள்ளானதன் பின்னணியில் ஏதோ சதி இருக்கிறது என்று பலர் கூறுகின்றனர்.



பாக்தாத்தின் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையாக தற்கொலைக் குண்டுத்தாரியின் உடையுடன் ஒரு தாக்குதல் தாரியை ஈராக்கிய வெடிகுண்டழிப்பு நிபுணர்கள் நிராயுதபாணியாக்குகின்றனர்.

## டிஸ்கவரி விண்கலம் பறப்பது தாமதமாகலாம்

அமெரிக்காவின் விண்கலமான டிஸ்கவரி கடந்த புதனன்று ஏழு விண்வெளி வீரர்களுடன் விண்ணில் செலுத்தப்படுவதாக இருந்தது. எரிபொருள் தாங்கியில் பழுது ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த விண்கலம் விண்ணில் செலுத்தப்படுவது கடைசி நேரத்தில் இரத்தானது.

இது எங்களுக்கு ஒரு பின்னடைவுதான். இதை நாங்கள் சரி செய்து விடுவோம். வரும் திங்கட்கிழமைக்குள் விண்கலத்தை மீண்டும் விண்ணில் செலுத்துவது இயலாது. விண்கலம் ஏவு தளத்திலேயே நிறுத்தப்பட்டு இருக்குமா அல்லது ஏவுகணைத் தயாரிப்புத் தளத்திற்கு கொண்டு செல்லப்படுமா என்பது தீர்மானமாகவில்லை என்று நாசா நிர்வாகி மைக்கேல் கிரிபின் கூறினார். இதனால் அது செலுத்தப்படும் திகதி தள்ளிப் போடப்பட்டுள்ளது.

## கரணம் போட்ட விமானம் கடலில் வீழ்ந்த பரிதாபம்

(சியோல்)

தென்கொரியா விமானப் படையைச் சேர்ந்த இரண்டு போர் விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக கடலில் வீழ்ந்தன. இரண்டு விமானிகள் பலியாகினர். மற்ற இருவர் தேடப்படுகின்றனர்.

தென்கொரியா விமானப் படையைச் சேர்ந்த இரண்டு போர் விமானங்கள் கடந்த புதனன்று இரவு பயிற்சியில் ஈடுபட்டன. வானில் குட்டிக் கரணங்கள் போட்டுக் கொண்டிருந்தன. அப்போது இரண்டு விமானங்களும் ஒன்றன்பின் ஒன்றாக விபத்துக்குள்ளாகின. ஒரு விமானம் கடலில் விழுந்தது. அதிலிருந்த இரண்டு விமானிகளும் பலியாகினர்.

இச்சம்பவம் நடந்த எட்டு நிமிடங்களில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த மற்றொரு விமானமும் கடலில் விழுந்தது. அதிலிருந்த இரண்டு விமானிகள் குதித்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களை தேடும் பணியை விமானப்படை மேற்கொண்டுள்ளது. விபத்துக்கான காரணம் தெரியவில்லை. அவர்களும் பலியாகியிருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

'விபத்து குறித்து புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முடிவு தெரியும் முன், விபத்துக்கான காரணத்தை கூற முடியாது எனவும் இரண்டு விமானங்களின் விமானிகளும், இரவில் தெளிவாகப் பார்க்க உதவும் அதிநவீன கண்ணாடியை அணிந் திருந்தனர்' என்று விமானப்படை தகவல் தொடாபாளர் கூறியுள்ளார்.



கிழக்கு ஜெருசலேமில் அனுமதியின்றி கட்டிய எட்டு பலஸ்தீனர்களின் வீடுகள் இஸ்ரேலிய அதிகாரிகளினால் அழிக்கப்படும் காட்சி.

# வயதுகுறைந்தவர்கள் வாகனம் செலுத்தத்தடை

# மீறுவோர் மீது தமிழீழகாவல்துறை சட்டநடவடிக்கை

## -வாகனப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**வயதுகுறைந்தவர்கள் வாகனங்களைச் செலுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதெனவும், அதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்துப்பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; அதிகரித்துவரும் வாகன விபத்துக் களைக் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதெனவும், இதன்மூலம் 18 வயதிற்குட்பட்டவர்கள் எவரும் உந்துருளி செலுத்துவது தடைசெய் யப்பட்டுள்ளதுடன் 21 வயதிற்குட் பட்டவர்கள் எவரும் கனரக வாகனங் கள் செலுத்துவதும் தடைசெய்யப் பட்டுள்ளதெனவும், அத்துடன் மேற் படி வயது குறைந்தவர்களுக்கு வாகனங்களைக் கையளிக்கும் வாகன உரிமையாளர்களையும் இதனைக் கவனத்திற் கொள்ளும்படி வேண்டி யுள்ளதுடன், இதனை மீறிச்செயற்ப டும் பட்சத்தில் சகலரும் சட்ட நட வடிக்கைக்குட்படுத்தப்படுவரென தமி ழீழ காவல்துறை வாகனப்போக்கு வரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் ப.சிவகு மாரன் தெரிவித்துள்ளார். (சோ)

# டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனையில் புதிய கட்டடத் தொகுதி திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் புதிய கட்டடத் தொகுதியை வைத்திய கலாநிதி கெங் காதரன் கடந்த புதன்கிழமை திறந்து வைத்தார்.

அன்றைய தினம்காலை 10.00 மணிக்கு மருத்துவமனை நிறை வேற்றுப்பணிப்பாளர் மனோஜ் தலை மையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ மருத்துவப் பிரிவுப்பொறுப்பாளர் ரேகா, தமிழீழ மருத்துவப்பிரிவின் மகளிர் பொறுப்பா ளர் அருந்தா ஆகியோர் ஏற்றிவைத் தனர். ஈகச்சுடரை வைத்தியகலாநிதி எழுமதி கரிகாலன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை புதுக்குடியிருப்பு பொன் னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையின் வைத்திய அதிகாரி சிவ பாலன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அலுவலகப்பகுதி, கணனிப்பகுதி, மாநாட்டு மண்டபம் அடங்கிய புதிய கட்டடத்தொகுதியை வைத்திய கலா நிதி கெங்காதரன் நாடாவைவெட்டி திறந்து வைத்தார்.

தொடர்ந்து மேடைநிகழ்வுகள் ஆரம்பமானது. இதில் வைத்தியகலா நிதி கெங்காதரன், வைத்தியகலா நிதி சிவபாலன், வைத்திய கலாநிதி எழு மதி கரிகாலன், மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஆகியோர் உரை யாற்றினர். மருத்துவமனை நிர்வாகப் பொறுப்பாளர் பரதனின் நன்றியுரை யுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

இந்நிகழ்வில் மருத்துவர்கள், போரா ளிகள், பணியாளர்கள், பொது மக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,ச)

# மருதங்கேணி இ.த.க பாடசாலையில் இடம்பெற்ற மேஜர் தவக்குமாரியின் வீரவணக்க நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கடந்த செவ்வாய்க்கிழமை ஏற் பட்ட எதிர்பாராத விபத்தின்போது வீரச்சாவடைந்த மேஜர் தவக்குமாரி (தங்கவேலு பவானிதேவி) அவர் களின் வித்துடல் மருதங்கேணியி லுள்ள அவரது வீட்டிலிருந்து நேற்று முன்தினம் மாலை 1.30 மணிய ளவில் மருதங்கேணி இராஜிங் வீதியூடாக மருதங்கேணி இ.த.க. பாடசாலைக்கு வீரவணக்க நிகழ்வுக்காக எடுத்துவரப்பட்டது. அங்கு நிதித் துறைப் போராளி தாயகன்தலை மையில் நடைபெற்ற வீரவணக்க நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப் பாளர் இனியவன் ஏற்றி வைத்தார்.

வித்துடலுக்குரிய ஈகச்சுடரினை தந்தையார் தங்கவேலு ஏற்றிவைக்க, மலர்மாலையினை தாயாரும் சகோத ரரும் அணிவித்தனர்.

தலைமையுரையினைத் தொட ர்ந்து நினைவுரைகளை சோதியா படையணியைச் சேர்ந்த முகிலரசி. கடற்படையின் வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவன் ஆகியோர் ஆற்றினார். நினைவுரையினைத் தொடர்ந்து மலர் வணக்கத்தினை மருதங்கேணி இ.த.க. பாடசாலையின் உபஅதிபர் விக்டோரியா ஆரம்பித்து வைக்க, அனைத்து மக்களும், மாணவர் களும், போராளிகளும் மலர்வணக்கம் செலுத்தினார்கள். அதனைத் தொட ர்ந்து வித்துடல் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் சகல இரா ணுவ மரியாதையுடனும் புனித புதை குழியில் விதைக்கப்பட்டது.(கு,11)

# நரம்பியல் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியிலுள்ள மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச்சங்கத்தினரின் நடமாடும் மருத்துவசேவையினர் ஏற்பாட்டில் நோர்வேயில் இருந்து வருகைதந்த நரம்பியல் வைத்திய நிபுணர் டாக்டர் சூசைஜோசப் அவர்களால் கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலையில் விசேட நரம்பியல் மருத்துவசிகிச்சை



படம்:-குகன்

...ந்த இரண்டு தினங்களாக நடைபெற்றுள்ளது.

...ற்படி மேற்கொள்ளப்பட்ட நடமாடும் மருத்துவசேவையில் இரண்டு ...ளில் 70 இற்கும் மேற்பட்ட நரம்பியல் தொடர்பான நோயாளர்கள் ...கிச்சை பெற்றுள்ளனர் (கு,தீ)

## கண்டெடுப்பு

பெண்களின் சிறிய கறுப்பு நிற கைப்பை ஒன்று கண்டெடுத்து ஈழ நாதம் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இக்கைப்பையினுள் சில ஆவணங்கள் உள்ளன உரியவர் ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளும் படி கேட்கப்படுகின்றனர்.

## விபத்தில் காயம்

முல்லைத்தீவு தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்பாக கடந்த வியாழன்று இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் முல்லை மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

குருபரன் என்பவரே காயமடைந் தவராவர். உந்துருளியில் பயணம் செய்து கொண்டிருந்தவேளை பாதை யிலிருந்து உந்துருளி கீழ் இறங்கி வீழ்ந்ததினாலேயே இவர் காய மடைந்தார். (20)

# ஒருதொகுதி அ.அட்டைகள் வந்து சேர்ந்தன

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் சுனாமியினால் தேசிய அடையாள அட்டையினை தவறவிட்டவர்களில் இவ்வருடம் முற்பகுதியில் பதிவு செய்தவர்களது ஒரு தொகுதி அடையாள அட்டைகள் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்கு வந்துள்ளன. அவ் அடையாள அட்டைகள் அந்தந்த கிராம சேவகரினால் உரியவர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றது. கூடுதலாக அவ் அடையாள அட்டைகளில் தொழில் என்ன என்பது பதிவு செய்யப்படவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது. (11)

# கண்ணகைபுரம் கிராமத்தில் வயல்விழா நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி விவசாயத்திணைக் களத்திற்குட்பட்ட அக்கராயன்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் உள்ள கண்ணகைபுரம் விவசாயக் கிராமத்தில் வயல்விழா சிறப்பாக



படம் :- (லோகீசன்)

நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு கண்ணகைபுரம் கிராமத்தில் அமைந்துள்ள முதன்மை விவசாயி ஒருவரின் தோட்டத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

2005ஆம் ஆண்டு சிறுபோகத் தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் விவசாயத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத் தப்படும் பயறு,கௌப்பி செய்கை களுக்கான வயல்விழா நடைபெற் றது.

மேற்படி விழாவில் தெரிவுசெய் யப்பட்ட 30 பயனாளிகள் கலந்து கொண்டனர். முதலில் பயறு, கௌப்பி போன்ற பயிர்கள் செய்கைபண்ணப் பட்டிருந்த பகுதிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், உதவி விவ சாயப் போதனாசிரியர் திருமதி சீ.ஆனந்தராசா உள்ளிட்டோர் பார்வை யிட்டனர்.

அதனைத் தொடர்ந்து விவசாயிக ளுடனான ஒன்று கூடல் இடம் பெற்றது. அக்கராயன்குளம் விவசா யப்போதனாசிரியர் ச.தம்பிராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் கருத்துக்களை தமிழீழ பொருண மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பா ளர் கரிகாலன், விவசாயப் பணிப்பாளர் ஆனந்தராசா, பிராந்திய ஆணையாளர் திருமதி.இராமச்சந்திரன் உள்ளிட் டோர் வழங்கினர். (லோ, தீ)

# சூழல் மாசுபடுதலைத் தவிர்க்கும் முகமாக சுகாதார சேவையினரால் திடீர் பரிசோதனை

(அலுவலக செய்தியாளர்)

சூழல் மாசுபடுதலைத் தவிர்க்கும் நோக்கில் தமிழீழ சுகாதார சேவையி னர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக கடந்த புதன்கிழமை கிளிநொச்சி நகரமையங்களில் காணப் படும் உணவகங்கள், ஓய்வகங்கள் மற்றும் ஊர்தி சுத்திகரிப்பு நிலையங் களைத் திடீர்பரிசோதனைக்குட்படுத் தினர்.

மேற்படி நடவடிக்கையினை தமிழீழ சுகாதாரசேவைப்பணிப்பாளர் ச.விக் கிரமன், கரைச்சிப்பிரதேச சபை செயலர் வே.குலேந்திரன், மனிதவள மேம்பாட்டு உத்தியோகத்தர், சுகா தார ஊழியர்கள் சகிதம் சென்று பார் வையிட்டு அவற்றிலிருந்து வெளிவரும் திண்ம,திரவ கழிவுகள் பாதுகாப்பான முறையில் அகற்றப்படுகின்றனவா எனப் பார்வையிட்டதோடு சிறுகழிவுப் பொருட்கள் தொடர்பான பிரச்சினை களும், இனங்காணப்பட்டு இனிவரும் காலங்களில் சுகாதார முறைப்படி எவ்வாறு பாதுகாப்பான முறையில் கழிவு அகற்றுவது எனவும் ஆலோ சனைகள் வழங்கப்பட்டது. (தீ,கு)

# சர்வோதயத்தின் நிதியுதவியுடன் கிராமமக்களுக்கு நுளம்புவலை

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிறுவனத்தினரால் சர்வோதயத்தின் நிதியுதவியுடன் கிராம மக்களுக்கு நுளம்புவலைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிறுவனத்தில் வைத்து உதயநகர் கிழக்கு, மேற்கு கனகபுரம் கிராமமக்களுக்கு நுளம்பு வலையினை சர்வோதய மாவட்ட இணைப்பாளர் எஸ் உதயகுமாரன் நெக்றோ இணைப்பாளர் த.நேசராசா




(படம்:-சோதி)

முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் வழங்கினர். கடந்த புதன் கிழமையன்று செல்வாநகர்,அம்பாள்குளம், ஆனந்த நகர், ஜெயந்திநகர் ஆகிய கிராம மக்களுக்கு மேற்படி நிறுவனத்தினரால் நுளம்பு வலைகள் வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### பலாலி இராணுவத்தள எல்லைக்கிராமங்களில்

# மீளக் குடியமர படையினரின் கெடுபிடிகளைக் கண்டித்து போராட்டம் நடத்த பொதுமக்கள் முஸ்தீபு!

(யாழ்ப்பாணம்)

**பலாலி இராணுவத்தளத்தை அண்டிய எல்லைக் கிராமங்களில் மக்கள் மீளக்குடியேறும் விடயத்தில் அரச படைகள் காட்டிவரும் கெடுபிடிகளுக்கெதிராக வெகுசனப் போராட்டங்களை முன்னெடுக்க இடம்பெயர்ந்த மக்கள் தயாராகி வருகின்றனர்.**

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியின் முன்னரங்க பாதுகாப் பணைப் பகுதிக்கப்பாலுள்ள 600 மீற்றர் தூர சூனியப்பிரதேசத்தினுள் மக்களை குடியமர படைத்தரப்பு அனுமதி மறுத்து வருகின்றது.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் சேதடைந்துள்ள அவர்களது வீடுகளை திருத்தம் செய்யவோ, அங்கு சென்றுவரவோ படையினர் தொடர்ந்தும் அனுமதி மறுக்கின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான சமாதான காலப்பகுதியில் கூட இவ்வாறான மீள்குடியமர்விற்கோ, வீட்டுத்திருத்தங்களுக்கோ படையினர் அனுமதித்திருக்கவில்லை.

குறிப்பாக குறித்த 600 மீற்றர் எல்லைப் பகுதியினுள்ளும், அதனை அண்டியுமுள்ள பன்னாலை மற்றும் அளவெட்டி பகுதிகளில் படையினரால் அடையாளப் படுத்தப்பட்டு வீடுகள் திருத்த தடைவிதிக்கப் பட்டுள்ளது.

மீளக்குடியேற விரும்பும் மக்கள் தத்தமது கிராமசேவையாளர்களூடாக பலாலி இராணுவத்தளத்தில இயங்கும் படைத்தலைமைக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனவும், பின்னர் படையினரின் அனுமதி வழங்கப்பட்ட பின் மீளக்குடியமர முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவ்வாறு விண்ணப்பித்தவர்களில் ஒரு சிலரை மட்டும் மீளக்குடியமர நிபந்தனைகளுடன் படைத்தரப்பு அனுமதித்துள்ளது. ஏனையோரது விண்ணப்பங்கள் பற்றி பதிலெதுவும் தெரிவிக்காது மௌனம் காத்து வருகிறது.

இந்நிலையிலேயே உயர்பாதுகாப்பு வலயத்திற்குவெளியே உள்ள 600 மீற்றர் சூனியப் பகுதியினுள் தம்மை முழுமையாகக் குடியமர அனுமதிக்குமாறு கோரியும், வீடுகளைத் திருத்தம் செய்வதற்கான அனுமதி கோரியும் வெகுசனப் போராட்டங்களை நடத்த மக்கள் தயாராகி வருகின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயத்திற்கான பிரதான வீதிகளை வழிமறித்து தாம் தொடர்போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த சூனியப்பிரதேசத்தினுள் பெருமளவிலான மக்கள் குடியிருப்பு மனைகளும், தோட்டக்காணிகளும் சிக்குண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

## தெல்லிப்பழையில் பட்டப்பகலில் திருட்டு

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழையில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள வீட்டில் சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் உட்பட இலத்திரனியல் உபகரணங்கள் பட்டப்பகலில் வீடுடைத்துத் திருடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை உயர்பாதுகாப்பு வலயச் சோதனைச்சாவடியில் இருத்து சுமார் 50 மீற்றர் தூரத்திலுள்ள திருச்சிநவரத்தினம் என அழைக்கப்படும் பாடசாலை அதிபர் வீட்டிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை பொலிசில் இது சம்பந்தமாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பகல் நேரத்தில் கணவன் மனைவி இருவரும் பாடசாலை சென்ற பின்னர் இத் திருட்டு இடம் பெற்றுள்ளது. (41)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் விடுதியில் இடநெருக்கடி

(நல்லூர்)

யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் இயங்கும் புற்று நோயாளர் விடுதியில் போதிய இடமின்மையால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண் டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் 26 ஆம் விடுதியில் தற்போது புற்றுநோயளர்களுக்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டுவருகின்றன. அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சைபெவருகின்றபோதிலும் கட்டட வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. தற்பொழுது புற்று நோய் சிகிச்சை பெறுபவர்கள் ஒரு அறையில் பலர் நிலத்தில் படுப்பதனால் வைத்தியர்களும், தாதியர்களும் சிரமப்படுவதுடன் நோயாளர்களும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். (41)

## மாணவனின் கல்விகற்கும் வாய்ப்பு மறுப்பு; மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மீள் குடியமரவென தாயகம் திரும்பிய தனக்கான கல்விவாய்ப்பு மறுக்கப்படுவதாகக் கூறி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் என்பவற்றிற்கு எதிராக மாணவனொருவர் இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

நெடுந்தீவு, சபாநாயகபுரத்தை சேர்ந்த ஜி.ஜி ஜனரஞ்சன் எனும் மாணவனே இம்முறைப்பாட்டை செய்துள்ளார்.

1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தையடுத்து இந்தியாவிற்கு தான் அகதியாகச் சென்றிருந்ததாகவும அங்கு கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு விவசாயக்கல்லூரியில் பட்டபடிப்பை மேற்கொள்ள தான் தெரிவு செய்யப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழ்நாடு உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் வெளிநாட்டவருக் கான உயர் கல்வி மறுக்கப்பட்டு தான் தாயகம் திருப்பப்பட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ள மாணவன் யாழ். பல்கலைக்கழகத்தில் தன் படிப்பை தொடர விண்ணப்பித்ததாகவும் முறைப்பாட்டிலே தெரிவித்துள்ளார்.

அவ்வேளையிலேயே தனது கல்விகற்கும் உரிமை மறுக்கப்பட்டு வெளிநாட்டவர்களுக்கான கற்கை நடைமுறையின் கீழ் பணம் செலுத்தி படிப்பை தொடர உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அம்முறைப் பாட்டில் தெரிவிதது்ள்ளார். (27)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சுகாதாரப் பொதி விநியோகம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையும் கனடா செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களின் சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்காக சுகாதாரப் பொதிகளை கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் வடமராட்சிப் பகுதியில் இரண்டாவது கட்டமாக விநியோகித்து வருகின்றனது. வாசனைச் சவர்க்காரம், சலவைச்சவர்க்காரம், பற்பசை, பற்தூரிகை, சுகாதாரத் துவாய், துவாய், சவர அலகு, சம்போ 200ml, றப்பர் சிலிப்பர் என்பனவே குறிப்பிட்ட அளவுகளில் இப்பொதியில் வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

## விண்ணப்பங்கள் நிரப்பி ஒரு வருடம்; வீடுகள் புனரமைப்பு நடவடிக்கை இல்லை!

(தென்மராட்சி)

தென்மராட்சியில் போரினால் சேதமுற்ற வீடுகளை புனரமைக்க நட்ட ஈட்டு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் பிரதேச செயலகத்தில் குவிந்து கிடப்பதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

2000ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய யுத்தத்தால் தென்மராட்சி பிரதேசத்தில் சேதமுற்ற வீடுகளை புனரமைக்கவென தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்பட்ட நட்ட ஈட்டு விண்ணப்பப்படிவங்கள் விலை கொடுத்து பொது மக்களால் வாங்கப்பட்டு சேதவிபரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஓர் ஆண்டுக்கு மேல் கடந்து விட்டது.

இந் நிலையில் மக்களிடம் இருந்துபெறப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் எந்தவித நடவடிக்கையும் இன்றி கட்டிப் போடப்பட்டு விட்டதாகவும், இது தொடர்பாக விசாரித்தால் அதிகாரிகள் வாய்திறப்பதில்லை என்றும் பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர் (28)

## அடிப்படைவசதிகளற்ற கட்டடத்தில் வலி.வடக்கு பிரதேசசபை அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் வடக்கு பிரதேச சபையானது அடிப்படைவசதிகள் எதுவும் அற்ற தற்காலிக கட்டடம் ஒன்றிலேயே இயங்கிவருவதால் இப்பிரதேசசபையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் வடக்கு பிரதேசசபை செயலாளர் திருமதி எஸ். மாணிக்கம் கூறினார்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடம் தெல்லிப்பழையிலுள்ள போதும்., இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயத்துள் முடக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக வலிவடக்கு பிரதேசசபையானது மல்லாகத்தில் இருக்கும் தற்காலிக கட்டடம் ஒன்றில் இயங்கிவருகிறது.

எனினும் இத்தற்காலிக கட்டடம் பிரதேசசபையின் சேவைக்கு போதிய எவு வசதிகள் அற்றதாகக் காணப்படுகிறது.

இதனால் சபையின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் கூறினார். (33)

## 238 ஆசிரியர்களுக்கு பயிற்சிநெறி பூர்த்தி

(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிகலாசாலையில் இருந்து இந்த ஆண்டு 238 பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்கள் வெளியேறியுள்ளனர். 2001-2002 கல்வியாண்டில் பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்ட பயிற்சி ஆசிரியர்களின் இறுதியாண்டுப் பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியாகியுள்ளன.

இந்தப் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்களில் சித்தியடைந்த 238 ஆசிரியர்களில் ஆரம்பக்கல்விக்கு 198 பேரும், நடனத்திற்கு மூன்று பேரும், சங்கீதத்திற்கு 22 பேரும், சித்திரத்திற்கு எட்டுப் பேரும் மனைப்பொருளியலுக்கு ஏழுபேரும் விசேட பயிற்சி பெற்றஆசிரியர்களாக வெளியேறியுள்ளனர். (கீ)

## பல்பொருள் விற்பனை அங்காடி விரைவில் பாவனைக்கு வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையால் பல்பொருள் விற்பனை அங்காடி முனீஸ்வரன் வீதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த விற்பனை அங்காடி வேலைகள் முழுமையாக முடிவடைந்து விட்டதாகவும், விரைவில் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படும் மெனவும் யாழ் மாநகரசபை ஆணையாளர் க.குணராஜா தெரிவித்துள்ளார்.

முற்றவெளியில் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த விற்பனை அங்காடி முனீஸ்வரன் வீதியின் இரு மருங்கிலும் அமைத்திருக்கின்ற நடைபாதை வியாபாரிகளுக்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஒவ் வொரு கடையும் 16000 ரூபா வீதம் 120 கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

விரைவில் முனீஸ்வரன் வீதியில் அமைத்திருக்கின்ற கடைகள் அகற்றப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட கடைத்தொகுதிக்கு மாற்றப்படவிருககின்றது.

இதனால் குடாநாட்டில் நிலவிவரும்போக்குவரத்து நெரிசல்கள் குறைக்கப்படுவதோடு விபத்துக்கள்ஏற்படு வதையும்தடுத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவிததார். (கீ)

## யாழ்.கல்விவலய பாடசாலைகளில் இன்று கணித,விஞ்ஞானப் போட்டிகள்

(நல்லூர்)

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கான கணித விஞ்ஞானப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு நடைபெறுகின்றன.

பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட கணித விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்றுமாணவர்களும் கோட்ட மட்ட ரீதியில் நடைபெறும் போட்டியில் பங்கு கொள்கின்றனர்.

இந்தப் போட்டியில் கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியிலும், நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கு யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியிலும்,யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலையிலும் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (கீ)

## நல்லூர் பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப்படும்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டடம் நல்லூர் மாநகரசபை அமைந்துள்ள காணியில் அமைக்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகம் அமைப்பது சம்பந்தமான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் இடம் பெற்றது.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இக்கலந்துரையாடல் இடம் பெற்றதைத் தொடர்ந்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈழவேந்தன் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணே[illegible] கலந்து கொண்டனர். (41)

# யாழ்.பல்கலைக்கழக தெருவெளி அரங்க குழுவின் "அரங்காலயம்"

26.12.2004 அன்று உலகையே உலுக்கிய கடல் கோள் அனர்த்தம் வடக்கு கிழக்கையும் சூழ்ந்து கொண்டது. ஓலமும் ஒப்பாரியும் தாயகத்திலும் ஒலித்தது. இதனால் அதிர்ச்சியுற்று பயமும் விரக்தியும் கொண்டவர்களாக, எதிர்கால நம்பிக்கையற்றவர்களாக நலன்புரி நிலையங்களில் முடங்கினர் எம் மக்கள்.

இம்மக்களை மீள் கட்டுமானப் பணிகளில் எவ்வாறு ஒன்று சேர்ப்பது. பங்கு கொள்ள வைப்பது. ஊர் முன்னேற்றத்திற்காக உழைக்கக்கூடியவர்களாக உருவாக்குதல். அவர்களின் சுமைகளில் இருந்து பயம் களைந்து நம்பிக்கையும் விடுதலை வேட்கையும் கொண்ட செயற்பாட்டாளர்களாக பலம் சேர்க்க யாழ்பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் பாடத்தைச் சேர்ந்த (தர்மலிங்கம், தோரா முகுந்தன், சுதாகரன், அருள் குமரன், உதயசீலன், சுரேந்திரன், செல்ரன்,டிலானி, லகுஷா, தட்சாயினி) தெருவெளி அரங்க குழுவினருடன் இணைந்து அரங்க செயற்பாட்டுக் குழுவினரும் களமிறங்கினர்.

சுனாமியின் தாக்கத்திற்குள்ளான நாளில் இருந்து அவர்கள் அருகில் சென்று கதை கேட்டனர். நலன்புரி நிலையத்தில் ஆடினர்..... பாடினர்....... உறவினராகினா. அவர்கள் மீள ஊர்சென்றபோதும். இடைத்தங்கல் முகாம்களில் இருப்புக் கொண்டபோதும் அவர்கள் ஊர்தேடிச் சென்று அவர்களின் சுமைகளின் பங்குதாரராகினர்.

தாம் விரும்பும் அந்த சமூக மாற்றத்தினை தமது பாடத்திட்டத்தின் ஒரு பகுதியான அரங்க செயற்திட்டத்தில் (Theatre Project) பிரயோகம் (Applied theatre) செய்தனர் தமது படிப்பையும், விருப்பையும், ஆர்வத்தையும் அர்ப்பணம் செய்தனர்.

சுனாமியின் தாக்கத்திற்குள்ளான வடமராட்சியின் கரையோரம் எங்கும் உறவின் பலத்தில் எல்லா இளைஞர்களையும் ஒரே பலம் சேர்க்க ஆண்களுக்கான அரங்காலயத்தினை ஒழுங்கு செய்திருந்தனர் தெருவெளி அரங்கக் குழுவினர்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. கோயில்களில் ஊர்கூடி ஒன்று சேர்ந்து தம் உணர்வுகளை பகிர்ந்து பலம் பெறுவது எமது பாரம்பரியம். இன்று அந்த வேலையை அரங்கும் செய்கின்றது. ஊர் ஊராக அரங்குகளை நடாத்தும் போது மக்கள் ஒன்று கூடுகிறார்கள். ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், ஆற்றுகை செய்கிறார்கள் அதன் மூலம் ஒருவரை ஒருவர் அறிந்து புரிந்து உறவு கொண்டு மனித உறவுகளை கட்டியெழுப்பும் இடமாக அரங்கு விளங்குகின்றது. இங்கு அரங்கு ஆலயமாகவுள்ளது. எல்லோரும் ஒன்று கூடி தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தி உணர்வுகளைப் பரிமாறி சிந்தனை ஒருமைப்பாட்டில் சாதிக்கின்ற வேகங் கொண்டெழும், சக்திபிறக்கும் இடமே அரங்காலயம் இந்த அரங்காலயம் தொடர்ந்து ஊர் ஊராய் உயிர்ப்பெற்று வருகின்றது.

அண்மையில் பருத்தித்துறை முனை கடற்கரையோர மண்டப வெளியில் நிகழ்ந்த அரங்காலயத்தில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி.க.சிதம்பரநாதன், பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் சு.நித்தியானந்தன், வணிகத்துறை விரிவுரையாளர் சிவராஜா, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், அரங்க செயற்பாட் டுக்குழு எனப் பலரும் பங்கு கொண்டு அச்சமூகத்திற்குப் பலம் கொடுத்தனர். இங்கு பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி.நித்தியானந்தன் பேசுகையில்,

" நாங்கள் பலதரப்பட்ட இடங்களில் இருந்து வந்தாலும் வித்தியாசம் இன்றி எல்லோருடனும் இணைந்து விளையாடி ஆடியமையினால் ஒரு குடும்பம் என்ற உணர்வைப் பெற இந்த அரங்காலயம் ஒரு நல்ல சந்தர்ப்பம். இந்த மண்டபத்தில் காண்பியங்களாக்கப் பட்டிருக்கும் ஒவ்வொரு வாக்கியங்களும் உங்களின் உறுதியைக் காட்டுகின்றது.

"கடல் கோள் எம்மைக் கொன்றது

மீண்டும் கடலை நாம் கொள்வோம்"

உங்கள் வாழ்க்கை பற்றிய குறிக்கோளில் நீங்கள் உயிர் பெற்றிருப்பதை தெளிவாகக் காட்டியுள்ளீர்கள். சுனாமி வந்து ஒன்று இரண்டு நாட்களில் நான் இப்பிரதேசத்திற்கு வந்தேன் இந்தப் பாதையால் வரமுடியாத அளவுக்கு இருந்தது. இன்று அந்த இடம் இது தானா என்று எண்ணத்தோன்றுகின்றது. அவ்வாறு உங்களால் இயன்றளவு இந்த இடத்தை மாற்றியது உங்களின் சாதனை. சுனாமியில் இருந்து மீள எழும்பி கடலிட்டையே எடுப்பம் என்ற உறுதி மட்டும் போதாது. எப்படி வாழலாம் என்பது தான் இன்றைக்கு நாங்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை "என்னதான் சுனாமி வந்தாலும் அழித்தாலும் இது எங்கட நிலம் இதை விட்டு எங்கையும் போக மாட்டம்" என்ற உறுதியை இந்த அரங்காலய ஆற்றுகையில் வெளிக் காட்டியுள்ளீர்கள். இது தான் தேவை இந்த அரங்கு விடயங்கள் மனதில் சில செய்திகளை உங்களுக்குத் தருகின்றது. நீங்களும் அவர்களும் சேர்ந்து ஒரே உறவாகக் கூடி செயற்படுகின்றீர்கள். இந்த ஒன்று கூடலே ஒரு பலம் தரும் சக்தியாகும்.

விளையாட்டுக்களுடன் ஆரம்பமாகி பாடலாகி, ஆடலாகி ஆற்றுகையாக படிப்படியாக செயற்பட்டுக் கொள்ளும் நிலையில் நாம் தனியே நிற்கின்றோம் என்ற சிந்தனை விடுவிக்கப்படுகின்றது. இவ்வாறு ஒன்றாகப் பலம் கொள்வதே நாம் சுனாமியின் தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்கான வழியாகும்.

இன்று உதவிகள் வழங்கவென வெளிநாடுகள் முன்வந்தாலும் தமிழர் பிரதேசங்களுக்கு அவை எவ்வளவு என்பதில் பூரண நிலை யில்லை. எந்த உதவியானாலும் எமக்கு எதனால் நன்மை உண்டு என்பதைக் கண்டு நாம் உதவிகளைப் பெறுவது அவசியம்.

உதராணமாக:-

இன்று உங்கள் பகுதியில் "எல்லோருக்கும் வள்ளம் கிடைத்த பின்பு தொழில் செய்வோம்" என்ற ஒருமித்த உறுதியானது எமது சமூகத்தை ஒன்றாக உயர்த்திவிடும் இந்த ஒருமித்த உறுதிதான் இன்று நாங்கள் அடுத்த அடியை எடுத்து வைக்க பலமாக இருக்கும்.

நாம் இயற்கை வளங்களையும் மனிதவளங்களையும் இணைக்கும் போது தான் விருத்தி வரும் போரின் மத்தியில் "இடைக் கால நிர்வாகம்" கேட்டோம் இன்று புதுவடிவில் வந்த சுனாமியின் அழிவுகளிலிருந்து மீள "பொதுக் கட்டமைப்பை" வலியுறுத்துகின்றோம்....... இவைகளினூடே எதிரி எம்மை ஒன்று திரள விடாமல் எம்மத்தியில் போராட்டங்களை ஏற்படுத்தி எம்மை குழப்பி விடுகின்றான். அதை நாம் தெளிவாக விளங்கி இவ்விடத்தில் ஒற்றுமையை வெளிக்காட்டிய மாதிரி முழு சமூகமும் இணைந்து எமது அடிமன விருப்பை வெளிக் காட்டி எல்லோரும் ஒரே தரத்தில் வாழக் கூடிய நிலையினை ஏற் படுத்த வேண்டும். எமது தாயக வளங்களையும் வேறு மூலதனங்களையும் பெற்று பங்கிட்டு ஒற்றுமையாகவும் உறுதியாகவும் வாழ்வதன் மூலம் நாம் ஓர் புதிய சமூகமாக சாதனை படைக்க முடியும்" என்றார்.

செல்ரன்
யாழ்.பல்கலைக்கழக தெருவெளி
அரங்க - குழு சார்பில்

# பேருந்து தரிப்பிடம் இல்லாத இடங்களில் பயணிகளை ஏற்றுவதை தவிர்க்குக

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் பேருந்து தரிப்பு இல்லாத இடங்களில் பயணிகளை ஏற்றுவதைத் தவிர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பேருந்து தரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் மட்டும் பேருந்து, சிற்றூர்திகளை நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்குமாறு தமிழீழ காவல் துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;பேருந்து தரிப்பு நிலையம் இல்லாத இடத்தில் வாகனங்களை நிறுத்தி பயணிகளை ஏற்றும் போதும், இறக்கும் போதும் பாதசாரிகள் வீதியின் குறுக்கே கடக்கும் போதும் விபத்துக்கள் நடைபெறுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமுள்ளமையின் காரணமாக இவற்றைத் கருத்திற்கொண்டு பேருந்து, சிற்றூர்தி, சாரதிகள் பேருந்து தரிப்பு நிலையங்களில் மட்டும் பயணிகளை ஏற்றி இறக்கும்படியும் இதை நடை முறைப் படுத்தாத சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தமிழீழ காவல்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் தெரிவித்துள்ளார். (சோ)

# நூல் வெளியீட்டு விழா

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலய முதல்வர் பொன்- தில்லைநாதன் எழுதிய "நினைவழியா நினைவுகள்" சிறு கதைத்தொகுதி நூல் வெளியீட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை கிளி.பூநகரி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பிற்பகல் 3.00 மணியளவில் பூநகரி பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ராசன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக வலய்க்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், பூநகரி கடற்புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர், பூநகரி வணபிதா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# திருட்டு அதிகரிப்பு

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் திருட்டுக்கள் அதிகரித்துவருகின்றது.

மேற்படி பிரதேசத்தில் கடந்த வாரம் தண்ணீரூற்று பகுதியில் நீர் இறைக்கும் மின் இயந்திரம் களவாடப்பட்டுள்ளதுடன் முள்ளியவளை பொன்நகர் பகுதியில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் கார் களவாடப்பட்டுள்ளது. இதேவேளை அண்மையில் முள்ளியவளை மரமடுவத்தில் உழவு இயந்திர பற்றி ஒன்றும் களவாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதைவிட இப்பிரதேசத்தில் சிறுசிறு களவுகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் இப்பிரதேச மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர். (ஆ)

# அடிக்கல் நாட்டும் விழா

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்துக்கு நிகொட் திட்டத்தின் கீழ் புதிய இருமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு அதிபர் அன்ரன் குலதாஸ் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரட்ணம் அவர்கள் நாட்டி வைத்தார். இந்நிகழ்வில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், புதுக்குடியிருப்பு பகுதி பங்குத்தந்தை, முல்லை மாவட்டக் கல்விக்கழக இணைப்பாளர் இரத்தினசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (08)

# தண்ணீரூற்று பொதுச் சந்தை அடிப்படை வசதிகளற்ற நிலையில்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்திலுள்ள தண்ணீரூற்று பொதுச்சந்தையில் அடிப்படை வசதிகள் இன்றி வியாபாரிகள் முதல் மக்களும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி சந்தையில் பொதுக்கிணறு இன்றி குடிநீர் தேவைக்காக வியாபாரிகள் மற்றும் சந்தைக்குச் செல்லும் மக்கள் பெரும் அவலப்பட்டு வருவதுடன் சந்தையில் பொது மலசலகூடம் அற்ற நிலையில் வியாபாரிகள் மக்கள் எனப்பலரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதை அவதானிக்க முடிவதுடன் சந்தைப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடும் நிலவி வருகின்றது சந்தைக்கான போதிய இடவசதியற்ற நிலையில் மிக நெரிசலான நெருக்கடிக்குள் வியாபாரிகள் பொதுமக்கள் கஷ்ரப்பட்டு வருகின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் விடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோருகின்றனர்.(ஆ)



கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் வாகனத்தரிப்பிடமின்மை காரணமாக செயலக அலுவல்களை மேற்கொள்ளச்செல்வோர் பல வாகனங்களை மேற்படி வளாகத்திற்குள் பாகங்களிலும் நிறுத்தி வருவதனை அவதானிக்க முடிகிறது. செயலக முன்றலில் இவ்வாறு வாகனங்கள் நிறுத்தப்பெற்றுள்ளமையினைப் படத்தில் காணலாம். (படம் – சோதி)

# என்பு நோயைக்கண்டு பிடிக்க நகத்தைச் சோதித்தால் போதும்

## - புதிய கருவியும் கண்டுபிடிப்பு

மனித உடலில் உள்ள என்பிலும், மனித விரல் நகத்திலும் காணப்படும் ஒரு பொதுவான இணைப்புப்பொருள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இவை இரண்டிலும் இது உள்ளது. எனவே என்பின் பலத்தை அறிய விரல் நகத்தைச் சோதித்தால் அதில் முக்கிய விளக்கம் கிடைக்கும்.

ஆஸ்டியோபோரோசிஸ் என்பது ஒரு வகை என்பு நோய், என்பு பலவீனம் அடைந்து உடையும் அபாயம் இந்த நோயால் ஏற்படும். அதை எளிதில் குணப்படுத்த முடியாது. இந்த நோய் பெண்களில் மூன்று பேருக்கு ஒருவரிடமும், ஆண்களில் 12 பேருக்கு ஒருவரிடமும் தோன்ற வாய்ப்புண்டு. இங்கிலாந்தில் மட்டுமே ஆண்டுக்கு இரண்டு இலட்சம் பேரிடம் இந்த நோய்ப் பாதிப்பு ஏற்படுகிறது. என்பில் புரதச்சத்து அணுக்களை ஒன் றோடொன்று இணைக்க டைசல்பைட் என்ற பொருள் தேவை. இந்தச் சத்துக்குறைந்தால் நகம் நிறம் மாறுகிறது இவ்வாறு மாறும் நபரின் என்பைச் சோதித்தாலும் இந்தப் பொருள் என்பிலும் குறைந்து போயிருப்பது தெரியவரும், எனவே நகத்தை சோதிக்க இப்போது புதியலேசர் கருவி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது ஒருவகை ஸ்கான் கருவியாகும்.


# உடல் ஆரோக்கியத்தை அறியும் பிளாஸ்ரர்



டிஜிற்றல் முறையில் உடல் ஆரோக்கியத்தை அறியக்கூடிய பிளாஸ்ரர் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

லண்டன் இம்பீறியல்க் கல்லூரி விஞ்ஞானி ஒருவர் இதைக் கண்டு பிடித்துள்ளார். இது சாதாரண ஒரு பிளாஸ்ரரைப்போன்று இருப்பினும் இலத்திரனியல் கருவி இணைக்கப்பட்ட ஒரு பிளாஸ்ரராகும். இது உடல் வெப்பநிலை, குருதி அழுத்தம், குழுக்கோஸ் மட்டம். என்பவை தொடர்பான தகவல்களை ஒரு கணினிக்கு அனுப்புவதன் மூலம் தெரியப்படுத்துகிறது.இப்பிளாஸ்ரர் ஐந்து சிலிக்கன் துண்டு களைக் கொண்டது. ஒருசிலிக்கன் துண்டானது இலத்திரனியல் செயல்முறைமூலம் இதயத்தின் செயற்பாடுகளில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட் டுள்ளதா என்பதனை ஆராயும். மற்றவை குளுக்கோஸ் மட்டம், குருதி அழுத்தம் என்பனவற்றை ஆராயும் இத்தகவல்கள் யாவும் கணினிக்கு அனுப்பப்பட்டு விடை காணப்படுகிறது.

# இணையத்தள இணைப்புடன் கையடக்கத்தொலைபேசி



ஜப்பானில் இரண்டாவது பிரசித்திபெற்ற கையடக்கத் தொலைபேசிக்கம்பனி ஒரு புதிய கையடக்கத் தொலைபேசியை அறிமுகப் படுத்தியுள்ளது. இக்கையடக்கத்தொலை பேசியுடன் இணையத்தள இணைப்பும் உள் ளடக்கப்பட்டுள்ளது ஒரு சிறப்பம்சமாகும்.


# கார் ஓட்டப்பந்தயங்களில் "றோபோ" இயக்கும் கார்

கார்ஓட்டப்பந்தயங்களில் ஈடுபடுத்தவென அமெரிக்க பாதுகாப்பு ஆய்வுத்திட்ட முகவர் நிலையம் மனிதனின் உதவியின்றி றோபோ வால் இயக்கப்படும் வாகனம் ஒன்றை உரு வாக்கி வெள்ளோட்டம் விட்டுள்ளது. கானே ஜிமிலன் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த ரெட் டீம் என்பவரால் உருவாக்கப்பட்ட இவ்வாகனம் வெள்ளோட்டத்தின் போது தங்கு தடையின்றி சுமார் 200 மைல் (232 கிலோமீற்றர் ) ஓடியுள் ளது. இந்த வாகனம் வரும் ஒக்டோபர் மாதம் எட்டாம் திகதி நடைபெறும் கார்ப்பந்தயத்தில் ஈடுபடுத்தப்படவிருப்பதாகத்தெரிவிக்கப்படு கிறது.இந்தப் போட்டியின் நோக்கம் மேலும் இதுபோன்ற றோபோ வகைவாகனங்களை உற்பத்தி செய்து பரீட்சித்துப் பார்த்தலாகும். வெற்றிபெறும் வாகனம் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் பரிசுத்தொகையைப் பெறும். எனி னும் இப்போட்டி பாலைவனம் ஒன்றிலேயே நடத்தப்படும்.

கடந்த வருடம் இவ்வாறான போட்டிகள் நடத்தப்பட்டபோதும் எந்த ஒரு றோபோவும் உரிய இலக் கையடையவில்லை.

எனினும் இம்முறை உருவாக் கப்பட்ட இந்த "மணல்புயல்" என்ற றோபோ வெற்றி பெறும் என ஆய்வுக்குழுவின் தலைவரான மேத்படி ரெட் தெரிவித்துள்ளார்.

இதன்வெள்ளோட்டத்தின்போது இதன் கணி னிகள், கட்டுப்பாட்டுக்கருவிகள் தொழில்நுட்ப அமைப்புக்கள் என்பன நன்கு பரிசீலிக்கப் பட்டதாகவும், இது மணிக்கு 57 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது. இது ஏனைய வாகனங்களைப் போன்று பாரிய இரைச்சலை ஏற்படுத்தாது. இது முழுவதும் கணினிமயப்படுத்தப்பட்டதாகவே அமைக்கப்பட்டுள்ளது.



# உயிர்வாயுவில் இயங்கும் புகையிரதம் கண்டுபிடிப்பு



உலகின் முதலாவது உயிர்வாயுவில் இயங் கும் பயணிகள் புகையிரதம் சுவீடனினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது பற்றி அதிகாரிகள் கருத்துத்தெரிவிக் கையில்; சூழலை மாசுபடுத்தாத சூழலுடன் ஒத்த போக்குவரத்து சேவைக்கான பிரதான படியெனத் தெரிவித்துள்ளனர். இப்புகையிரதம் நாட்டின் கிழக்குக் கடற்கரையினூடாக லிங்கோ பிங்கிற்கும், வாஸ்ரோவிக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. 54பயணி களை ஏற்றிச் செல்லக்கூடிய இப்புகையிரதம் இரு உயிர்வாயுவில் இயங்கும் புகையிரத எஞ் சின்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் வேகம் மணிக்கு 130 கி.மீற்றராகும். இது சூழ லில் அதிகரித்துவரும் காபனீரொக்சைட் வாயு வின் அளவைக்குறைக்க ஒரு சிறந்த தோற் றப்பாடு என வர்ணிக்கப்படுகிறது. ஜேர்மனி ஏற்கனவே இவ் உயிர் வாயுப் புகையிரதங் களை அறிமுகப்படுத்தினாலும் இதுவே உல கில் முதன்முதல் அறிமுகப்படுத்தப்பட்ட பய ணிகள் புகையிரதமாகும்.

# தூக்கமாத்திரை, மென்பானங்கள் நெஞ்செரிப்பை ஏற்படுத்தும்

தூக்கமாத்திரை மற்றும் மென்பானங்கள் நெஞ்செரிச்சலை ஏற்படுத்தி தூக்கத்தை கெடுத்துவிடும் என்று வல்லுநர்கள் தெரிவிக் கின்றனர்.துரதிர்ஷ்டவசமாக இந்த இரண்டையும் படுக்கைக்குச் செல்வதற்கு முன் பலரும் பயன் படுத்துகிறார்கள். நெஞ்செரிச்சல் பிரச்சினைக்கு பொதுவாக பரிந்துரைக்கப்படும் benzodiaz-epines மருந்துகளும் சரி, மென்பானங்களும் சரி ஒரு நபரின் அமைதியான தூக்கத்தை கெடுத்துவிடும் என்கிறார்கள் அவர்கள். வயிற் றில் உள்ள அமிலமானது உணவுக் குழாயில் மேல் நோக்கித் தள்ளப்படுவதால் ஒருவகை யான நெஞ்செரிச்சலுடன் கூடி புளித்த ஏப்பங் களும், நெஞ்சு வலியும் உண்டாகும்.

பொதுவாக நறுமணப்பொருட்கள், கொழுப் புச்சத்து மிகுந்த எண்ணெய்ப் பலகாரங்களை சாப்பிடும்போதும் நெஞ்செரிச்சல் ஏற்படுவது வழக்கம் தான். இதனால் பெரிய பிரச்சினை ஒன்றும் ஏற்படாது. இந்த வகை நெஞ்செரிச்சல் எல்லாம் எப்போதாவது தான் உண்டாகும். ஆனால் ஜெர்டு எனப்படும் gastroesophageal reflux disease வியாதியும், அமில அளவு உயர்வு காரணமாகப் புற்றுநோயும் வந்து விட் டால் நெஞ்செரிச்சல் மீண்டும் மீண்டும் வருவ தற்கு வாய்ப்புகள் உள்ளன.

இரவு நேரங்களில் நெஞ்செரிச்சல் ஏற்படு வதைத் தடுக்க,கார்பனேற்றம் செய்யப்பட்ட மென் பானங்கள், தூக்க மாத்திரைகள் ஆகியவற்றை பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். இதுபோக உடல் எடையைக் குறைப்பதன் மூலமும் நெஞ் செரிச்சலைத் தடுக்கலாம்.


# கொழுப்பு அதிகமாகத் தேங்கினால் பக்கவாத ஆபத்து உண்டு

கூடுதல் எடை மற்றும் உடல் பருமன் ஆகியவற்றுக்கும் இருதய நோய்கள் மற்றும் பக்கவாதத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டது. தான் என்ற போதிலும், உடலின் எந்த இடத் தில் கூடுதலான கொழுப்பு தேங்கி இருக்கிறது என்பது முக்கியமானது. குறிப்பாக இடுப்புப் பகுதியில் கொழுப்பு அதிகமாகத் தேங்கிக்கிடக் கும் ஆண்களுக்கு பக்கவாத ஆபத்து அதிக மாக இருப்பதாகப் புதிய ஆய்வுகள் தெரிவிக் கின்றன. சிலருக்கு ஒட்டுமொத்த உடல் எடை யும் அதிகமாக இருக்கலாம். ஆனால் அதனால் பக்கவாத ஆபத்து இருக்கிறது என்று சொல்ல முடியாது. அதேசமயம் ஒட்டுமொத்த எடையும் இடுப்புப் பகுதியில் பெருத்துக் காணப் படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்.. அப் போது பக்கவாத ஆபத்து பெரிய அளவுக்கு தலை தூக்கும் வாய்ப்பு உண்டாகிறதுஅது ஏன் இடுப்புக் கொழுப்புக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்கிறீர்களா?

இயல்பாகவே அடிவயிற்றுக் கொழுப்பானது வளர்சிதை மாற்றத்துடன் நேரடியாகத் தொடர் புடையது. இடுப்பு எக்கச்சக்கமாகப் பெருத்து இருக்கும் பட்சத்தில் வளர்சிதை மாற்றம் பாதிப்புக்குள்ளாகிறது. இதன் விளை வாக இரத்த அழுத்த சிக்கல், எல்.டி.எல் எனப்படும் கெட்ட கொழுப்பு அதிகரிப்பது இன்சூலின் ஹார்மோன் செயற்பாட்டுக்குப் பாதிப்பு என பலவிதமான பிரச்சினைகள் ஏற் படும்.

ஆகையால் இடுப்புப் பகுதியில் சதை கூடு வதை உடனடியாக நிறுத்த வேண்டும். கூடு தல்கொழுப்பை குறைக்க சத்தான ஆகாரங் களும்,உடற்பயிற்சியும் மிகவும் அவசியம் ஆகும்.

# அடுத்த பத்து வருட விண்வெளி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரஷ்யா அனுமதி



ரஷ்சிய அரசாங்கம் அடுத்த பத்து வரு டங்களுக்கான விண்வெளி நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் ரஷ்யா செவ்வாய்கிர கத்திற்கு மனிதன் பயணத்தை மேற்கொள் வது எவ்வளவிற்குச் சாத்தியம் என்பது பற்றியும் பரிசோதனையை மேற்கொள்ள விருப்பமாகவுள்ளது. இத்திட்டத்தின்படி ஆறு தன்னார்வமுடைய தொண்டர்கள் 500 நாட்கள் மொஸ்கோவிலுள்ள விண்வெளி மாதிரியில் தங்கவுள்ளனர். இத்திட்டத்திற்கு ஏற்கனவே 20 பேர் விண்ணப்பித் துள்ளனர்.ரஷ்யா சர்வதேச விண்வெளிஆய்வுமையத்திற்கான பொருளாதாரப்பிரச்சினையை எதிர்நோக்கியிருந்தது. ஆனால் புதிய பத்து வருட வரவு செலவுத்திட்டத்தில் 10.5 மில்லியன் அமெரிக்கடொலர்களை ஒதுக்கியுள்ளது.

# 35 புதிய தவளை இனங்கள்



இலங்கையிலுள்ள காடுகளில் பல வகையான புதிய இனத் தவளைகள் காணப்படுவதாக உயிரியல் ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர்.

ஆயினும் மனித நடவடிக்கைகள் காரணமாக பல தசாப்தங் களுக்கு முன்பிருந்த தவளையினங்கள் அழிவுற்றிருக்கின்றன அல்லது காணாமல் போயுள்ளன என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இலங்கையின் வனவிலங்கு காப்பக நம்பிக்கை நிதிய ஆய்வாளர்களின் ஆய்வுகளின்படி 35 வகையான புதிய தவளை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் 19 வகையான தவளைகள் அழிவுற்றிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்காடுகள் அழிக்கப்பட்டு இறப்பர்,தேயிலை போன்ற பயிர்கள் பயிரிடப்படுவதால் மேற்படி தவளைகள் அழிவுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிங்காவில் 105 வகையான தவளைகள் காணப்படுவதாகவும் அவற்றில் 86 வகைகள் தற்போதும் பாதுகாக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவை உலகிலுள்ள 4500 வகைத்தவளைகளில் சில வகைகளாகும்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் ஓரிடத்தில் குவிப்பு!

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளுக்கென சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களால் கல்முனைக்கு வழங்கப்பட்ட அம்பியூலன்ஸ் உட்பட பல உதவிகள் இன்னும் கையளிக்கப்படவில்லையென புகார் தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளுக்கு இவைகளை வழங்காமல் சற்றும் பாதிக்கப்படாத ஒரு வைத்தியசாலையில் அவற்றை தேக்கி வைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

மலேசியாவின் பாரிய அரசசார்பற்ற நிறுவனமான "மேர்சி மலேசியா" என்ற நிறுவனம் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைக்கென ஒரு அம்பியூலன்சை கல்முனை சுகாதாரப் பணிப்பாளரிடம் கையளித்தது. ஆழிப்பேரலையால் மருதமுனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் ஆகிய நான்கு வைத்தியசாலைகள் இப்பிரதேசத்தில் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி அம்பியூலன்ஸ் நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலைக்கென "மேர்சி மலேசியா" நிறுவனம் கையளித்ததாகத் தெரிவிக்கின்றது. பிரஸ்தாப வைத்தியசாலை நிந்தவூர் பாடசாலையொன்றில் தற்காலிகமாக பல வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. மேற்படி அம்பியூலன்ஸ் வண்டிகள் பாதிக்கப்பட்ட நிந்தவூர் வைத்தியசாலைக்கோ அல்லது ஏனைய பாதிக்கப்பட்ட வைத்தியசாலைக்கோ வழங்கப்படாமல் கல்முனை அஸ்ரப் ஆதாரவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை சவுதி அரேபியா செம்பிறைச் சங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதமுனை, சாய்ந்தமருது, நிந்தவூர் வைத்தியசாலைகளுக்கென பற்சிகிச்சைக்கான நவீன கதிரையும், அதற்கான உபகரணத் தொகுதியையும், கல்முனை சுகாதாரப் பணிப்பாளரிடம் கையளித்தும் இதுவரை அது அவ்வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவில்லை. மருதமுனை சுற்றயல்கூறு வைத்தியசாலை அபிவிருத்திச்சபை இது தொடர்பாக மாகாண ஆளுநர், சுகாதார செயலாளரிடமும், அறிவித்ததுடன் பிரசுரமொன்றையும் வெளியிட்டுள்ளது.

இன்னுமொரு நிறுவனம் 160 மெத்தைகள் வழங்கியதாகவும், அவையும் அதேநிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவை தொடர்பாக கல்முனைக்கான சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.நஜிமுதீனிடம் கேட்டபோது இதுபற்றித் தனக்குத் தெரியாதென்றும் முன்பிருந்தவரின் கைங்கரியமாக இருக்கலாமெனவும் கூறியுள்ளார்.

# நிரந்தர நியமனம் கிடைக்காத பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம்

(கொழும்பு)

இது வரையும் நிரந்தர நியமனம் கிடைக்காத சகல பட்டதாரிகளும் ஒரு மாதத்திற்குள் நிரந்தர சேவையில் அமர்த்தப்படுவார்கள் என்று பிரதிநிதியமைச்சர் றஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார். நிரந்தர நியமனம் பெறவுள்ள ஆசிரியர் பிரச்சினைகள் விரைவில் தீர்த்து வைக்கப்படுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரதிநிதியமைச்சர் இது பற்றி கருத்து வெளியிடுகையில், சனாதிபதி செயலகம் சகல அமைச்சுக்களுக்கும் இந்த ஆட்சேர்ப்புக்களை மிக விரைவில் செய்யுமாறு எழுத்து மூலம் பணிப்புரை வழங்கியுள்ளது. எனக்கூறினார்.

# பாலத்தோப்பூரில் காயமடைந்தவர்களில் லெப்.கேணல் தர அதிகாரியும் ஒருவர்

திருகோணமலை- மூதூர் - பாலத்தோப்பூர்ப் பகுதியில் கடந்த புதன் கிழமை இரவு படையினர் மீது இடம்பெற்ற கைக்குண்டுத்தாக்குதலில் காயமடைந்த இராணுவத்தினரில் ஒருவர் லெப்.கேணல் தர அதிகாரி எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்துக் கூறியுள்ள இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்ணாயக்க பண்சல்வத்தை இராணுவ முகாமிற்கு உணவு கொண்டு சென்ற படையினரின் வாகனம் மீதே காட்டில் இருந்து இத்தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத். தெரிவித்துள்ளார்.


## SRILANKA RED CROSS SOCIETY, KILINOCHCHI BRANCH.

**IMMEDIATE VACANCIES FOR THE POST OF FIELD PROJECT COORDINATOR (FPC)**

Applications are invited by the Srilanka Red Cross Society, Kilinochchi Branch for the Post of **Field Project Coordinator (Health)**. The applicants must have the followings.

- Passed the A/L exam.
- Good knowledge of written and spoken skills with fluency in English language and skills in report writting.
- Age 25 - 45 Years.
- Computer Literacy
- 02 Years Working experience is the added advantage,
- Meet us with your CV on 19 th and 20th of July at 9 00am at the Srilanka Red CrossSociety, Kilinochchi Branch,kannan Temple road, Kilinochchi. with the following documents.
  - Birth certificate
  - Educational certificates
  - Computer Certificate
  - And other documents.

K.Ganes
Hony. Secretary.

An attractive remuneration package awaits for the selected candidate.

(சி.12362)


# சரிந்தது சிறீ. பங்குச்சந்தை!

இலங்கையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குறியாகி உள்ள நிலையில் சிறிலங்காவின் வியாழக்கிழமை பங்குச்சந்தை வர்த்தகம் சரிவடைந்துள்ளது.

பெருமளவு பங்கு வர்த்தகம் நடைபெறுகிற சிறிலங்கா பங்குச்சந்தையின் விலைச்சுட்டெண் 56.50 புள்ளிகள் அளவிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

கொழும்பு பங்குச்சந்தையில் நேற்று முன்தினம் காலை பங்கு வர்த்தகம் தொடங்கும் போது விலைச்சுட்டெண் 1952.17 புள்ளிகளாக இருந்தது. வர்த்தகர் முடியும் நிலையில் 1924.00 என்ற குறைவான விலைச் சுட்டெண்ணில் முடிவடைந்தது.

# திருமலை புத்தர் சிலை விவகாரம் வழக்கு 18 ஆம் திகதி ஒத்திவைப்பு

(கொழும்பு)

திருகோணமலையில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றுமாறு சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனு தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வாதம் முன்வைக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் மனுவிற்கு எதிராகத் திருகோணமலை சீனன்குடா திமுத்துகம விஹாரையின் பிக்கு தாக்கல்செய்த மனு கடந்த புதன் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மனுவின் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த சட்டமா அதிபரின் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சி. ஆர். த சில்வா தமது வாதத்தில் குறித்த புத்தர் சிலையானது அரசாங்கத்தின் இடம் ஒன்றில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் வழக்கு எதிர் வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (32)


## Project Co-ordinator

MEDECINS DU MONDE

**To support preparatory tasks and implementation of the programme (Rehabilitation of Mallavi Hospital)**

**Skills:**

1. Drafting, support planning and formulation of the project pro posals and budget. Preparation of work plans, timeframes and site planning.
2. monitoring programme activities and ensure the timely submis sion
3. Preparation of estimates for new works. Preparation of tender documents and evaluation of tenders.
4. Management of the construction process. participate in pur chasing of raw materials, labour rates, equipment, stock man agement.
5. Project management: implementation of the programme and follow up the activities.
6. Communication and negotiating with Government Departments to ensure the smooth flow of operations.

**Knowledge:**

1. 5 years minimum experience in management of Building Con struction
2. Ability to write and speak in English and Tamil essential.
3. Good communicator with strong personality.
4. Willingness to live in the Vanni.
5. Good computer knowledge would be an asset.
   If you are interested, please come on monday morning 18th of july in our office in Mallavi, Mallavi Team.

(5980)





(சி.12328)

## வரிவிளம்பரம்

### இடமாற்றம்

கச்சேரி அருகாமை கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கி வந்த கோமான் தையலகம் 15.07.2005 தொடக்கம் கச்சேரி முன்பாக யாழ்சாலை (A-9) கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்குகின்றது. என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம். (6362)

### விற்பனைக்குண்டு

சேவியர் கடைச் சந்திக்கு அருகாமையில் உள்ள இலக்கம் 158 ஆனந்தநகரில் 1/2 ஏக்கர் காணியும் 10ஆம் பண்ணையில் உள்ள 104 இலக்கத்திற்குரிய 2ஏக்கர் காணியும் விற்பனைக்குண்டு தொடர்புக்கு: எஸ்.குகன். இல-104, 10ஆம் பண்ணை, கனகபுரம் (6365)

### வழமைக்குத் திரும்பியது

(அலுவலக செய்தியாளர்)

கிளிமுல்லைமாவட்டங்களில் செயலிழந்திருந்த தொலைபேசிச் சேவை நேற்று வழமைக்கும் திரும்பியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்குப் பின்னர் செயலிழந்திருந்த தொலைபேசி இணைப்புகள் நேற்று முற்பகல் 10.00 மணியின் பின்னர் செயற்பட ஆரம்பித்தன. இருப்பினும் அனைத்து இணைப்புகளும் சீரான முறையில் செயற்படவில்லை சில இணைப்புகளில் இருந்து தொடர்புகளை ஏற்படுத்த முடியாமல் உள்ளது.

(லோ)

## கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் கிளிநொச்சி

### தரம் 1 மாணவர் அனுமதி-2006

2006 ஆம் ஆண்டு தரம்–1 இல் மாணவரைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அரசாங்க சுற்றறிக்கைப் பிரகாரம் மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

- விண்ணப்பப் படிவங்களை பாடசாலையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்ப முடிவுத்திகதி 31.07.2005

அதிபர்,
கிளி/கிளிநொச்சி ம.வி.

(சி.12230)

## பிறந்த நாள் நினைவஞ்சலி



பொல்லாத
காலனவன்
சொல்லாமல்
வந்ததனால்
பொன்னான
எம் சிட்டு
பூமி விட்டுச்
சென்றதையா

சுதந்திரன் –அபிராமி

பிறப்பு:~ 16~07~2002
இறப்பு:~ 26~12~2004

வேம்படி,
வடமராட்சி கிழக்கு

தகவல்:-
நண்பர்

(6404)

## 17 ஆம் ஆண்டு நினைவில்

### சைமன் ஜெயக்கொடி

தோற்றம்: 03.07.1960 மறைவு:-16.07.1988

சம்பவம்: –1988 தேசத்துரோகிகளின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவடைந்தார்.

ஆண்டு பல கடந்தும் அழியாது
உன் அத்திவாரம்
ஈண்டு ஈழத்துக்கோ இல்லை வெகுதூரம்

தகவல்:
மாமா: கிருஷ்ணசாமி
(பாண்டி) அம்மன் கோவில் வீதி, செல்வாநகர்

(சி.12363)

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
03.09.1962

இறப்பு
17.07.1986

### 2ம் லெப்.ராஜ்குமார்

சூசப்பிள்ளை ஆசீர்வாதம் (ஜெகா)
மணற்குடியிருப்பு
முல்லைத்தீவு

நாட்டின் விடியலை நாடி நீ மறைந்து 19 ஆண்டுகள் ஆயினும் ஆறாத் துயருடன் மீளா நினைவுகளை மீட்கும் உன் உறவுகளும் உன் நினைவால் கண்ணீர் சுமந்து வாழும் ஜீவதாஸ் குடும்பத்தினர்.

17.07.2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் 19ஆம் ஆண்டு நினைவஞ்சலியிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

முகவரி:-
S.நடராசா
2ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

(6366)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஏலவிற்பனை

எங்கே.......
எப்போது......
எவ்வகைப்பொருள்......

- இலத்திரனியற் பொருட்கள்
- மின்னியற் பொருட்கள்
- ஊர்தி உதிரிப்பாகங்கள்
- புடைவை வகை
- அழகுசாதனப்பொருட்கள்

நாளை எதிர்பாருங்கள்.

(சி.12331)

## IMMEDIATE VACANCY

Swiss Labour Assistance SAH

**Translator and research assistant (female)**
Applications are requested from experienced women in the field of social sciences, research and translation.

Solidat is a consortium of orgnizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Sri lanka comprises of three international MGOs Arbeiter Semariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and swiss labour Assistance (SAH).

The position is based in Kilinochchi The selected candidate will assistan anthropologist in her research on the conditions of women ant related gender issues.

**Other duties will include:**

- Take down minutes of the meetings with women groups and personal interviews.
- Maintain contact with women organizations.

**Required qualifications:**

- Experience in social researches
- Computer skills
- Should be fluent in English and Tamil (knowledge of Italian or French would be an added advantage)


**Period of contract**
Initially for a period of two months. Extension will be considered based on the per formance and the requirement at the time.

Cover letter and curriculum vitae should be addressed to:
Ms. Cristina Natali Swiss Labour Assistance,
No. 156, Jafna Road, Paranthan, Kilinochchi.
**Deadline for applications is 20th July 2005.**

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

(சி-12333)

## சாவு அறிவித்தல்




### கணபதிப்பிள்ளை தெய்வானை

நெடுந்தீவு நடுக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் யோகபுரம் மத்தி மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தெய்வானை அவர்கள் 14.07.2005 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சுந்தரலிங்கம் (தம்பனை), வதனா (மாங்குளம்), அருந்ததி (மன்னார்), ஸ்ரீக்குமார் (நெடுந்தீவு), மணிவண்ணன் (சிலாவத்தை), மாலினி (மல்லாவி), நவம் (திருகோணமலை), வள்ளுவன் (மாவீரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வியாளாச்சி, காலஞ்சென்ற சின்னத்தங்கச்சி காலஞ்சென்ற விசுவநாதன், காலஞ்சென்ற சண்முகநாதன் வைத்திய நாதன் (நெடுந்தீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவம், பொன்னுத்துரை, அருந்தவநாதன், வவா, டில்லி வெள்ளை, சங்கர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரது இறுதிச் சடங்கு நாளை பி.ப 3.00மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
கு.நிசந்தன் (பேரன்)
753, யோகபுரம், மல்லாவி.

(6367)

# முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்போட்டி மேற்கிந்தியத்தீவு தடுமாற்றம்





சிறிலங்கா-மேற்கிந்தியதீவு அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று சீரற்ற கால நிலை காரணமாக ஆட்டம் நிறுத்தப்படும் போது இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடும் மேற்கிந்தியதீவு ஆறு விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆட்டமிழக்காது சந்தர்போல் 29 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

பந்து வீச்சில் சமிந்தவாஸ் நான்கு விக்கெட்டுக்களையும், முரளிதரன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக போட்டியின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் 271 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட் என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்திய தீவு 285 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் சந்தர்போல் 69, ரம்டின் 56 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் மாலிங்க நான்கு விக்கெட்டுக்களையும், வாஸ் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவாது இனிங்சை ஆரம்பித்த சிறிலங்கா மளமளவன விக்கெட்டுக்களை இழந்தது. இறுதியில் வாஸ், முரளி தாக்குப்பிடித்து ஆடி ஓட்டங்களை குவித்தபோதும், 227 ஓட்டங்களுக்கு அதன் முதல் இனிங்ஸ் முடிவுக்கு வந்தது.

துடுப்பாட்டத்தில் வாஸ் 49 ஓட்டங்களையும், முரளி 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் லோசன் மூன்று விக்கெட்டுக்களையும், பவல், ஒமரிபாங்ஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## மே.தீவு கிரிக்கெட் சபை அழைத்தால் சிறிலங்காத் தொடரில் பங்கேற்கத் தயார்



சிறிலங்காவில் நடக்கும் முத்தரப்பு கிரிகெட் போட்டியில் கலந்துகொள்ள தயார் என்று முன்னணி வீரர் லாரா கூறியுள்ளார்.

தற்போது, சந்தர் போல் தலைமையிலான மே.தீவு கிரிகெட் அணி சிறிலங்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்தப் பயணத்தில் முன்னாள் தலைவர் லாரா,கெய்ல், சர்வான் உள்ளிட்ட பத்து முன்னணி வீரர்கள் விளம்பர ஒப்பந்த பிரச்சினை காரணமாக பங்கேற்கவில்லை. அவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்துவிட்டதால் புதுமுகங்களை கொண்ட இரண்டாம் தரமான அணி சிறிலங்கா சென்று விளையாடி வருகின்றது. இந்த நிலையில் 36 வயதான லாரா நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது;

இலங்கையில் விளையாடி வரும் மே.தீவு அணியில் இடம் பெற முடியாதது வருத்தம் அளிக்கிறது. இது எதிர்பாராத நிகழ்வு என்று கூறமாட்டேன். விளம்பர பிரச்சினையில் மே.தீவு கிரிகெட்சபை சுமுகமாக நடந்து கொண்டிருக்க வேண்டும். வீரர்கள் சங்கத்துடன் சமாதான பேச்சுவார்த்தை நடத்தி, விளம்பர சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்காலம். காலம் கடந்துவிட்டது. இனி அது பற்றி பேசி பயன் இல்லை.

ஐந்து வயதில் இருந்தே கிரிக்கெட் விளையாடி வருகின்றேன். மேற்கிந்திய தீவுக்காக விளையாடத் தொடங்கிய காலத்தில் இருந்து இன்று வரை அணியில் இருந்து நீங்க வேண்டும் என்று ஒரு நிமிடமும் எண்ணியது கிடையாது. அழைத்தால். இப்போது கூட விளையாடத்தயாராக இருக்கிறேன். 36 வயதில் முன்புபோல சுறுசுறுப்புடன் செயற்பட முடியாது. அணியில் விளையாடாமல் ஓய்வில் இருக்கும் சமயத்தில் உடல் தகுதியை மேம்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். மேலும் இரண்டு ஆண்டுகள் விளையாட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது இவ்வாறு அவர் கூறினார்.

லாரா இதுவரை 117 டெஸ்டில் 10818 ஓட்டங்களையும், 256 ஒருநாள் போட்டிகளில் 9354 ஓட்டங்களையும் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாக்.வீரர் சபிர் அகமட் அணியிலிருந்து நீக்கம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான சபிர் அகமட்டின் பந்துவீச்சு தொடர்ந்து பிரச்சினைக்குட்படுவதால் அவர் அணியிலிருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

ஏற்கனவே அவரின் பந்து வீச்சு தொடர்பில் சந்தேகங்கள் எழுந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் பல உடற்கூற்று நிபுணர்கள் மூலம் 21 நாட்களாக நடைபெற்ற பரிசோதனைகள் மூலம் பந்து வீச்சின் போது அவரது மணிக்கட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப குறிப்பிடப்பட்ட 15 பாகைக்கு அப்பால் வளைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தான் பெரிதும் கவலையடைவதாக விளையாட்டுத்துறை அதிகாரி சலிம் அல்டப் தெரிவிக்கிறார்.

இது போன்றே சகலதுறை வீரரான சொகைப் மாலிக்கின் பந்து வீச்சிலும், கடந்த வருடம் பிரச்சினையிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் சீர் செய்யப்பட்டது. அகமட் ஒன்பது டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றி 46 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். அவரின் சாதனை 119 ஓட்டங்களுக்கு எட்டு விக்கெட் என்பதாகும். இதற்கிடையில் வரும் அக்டோபரில் சொந்த மண்ணில் பாகிஸ்தான் இங்கிலாந்தைச் சந்திக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிம்பாப்வே சுற்றுலாவை இரத்துச் செய்தால் நியூசிலாந்துக்கு பலத்த நெருக்கடி

சிம்பாப்வே சுற்றுப்பயணத்தை இரத்துச் செய்தால், சர்வதேச கிரிக்கெட் சபைக்கு ரூ.ஒன்பது கோடிக்கும் அதிகமாக இழப்பீடு கொடுக்கவேண்டியிருக்கும் என்பதால் நியூசிலாந்து அரசு முழிக்கிறது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் செல்ல வேண்டும். ஆனால் சிம்பாப்வேயின் அரசியல் சூழலைக் காரணம் காட்டி தங்கள் அணியை அங்கு அனுப்பத்தயங்குகிறது. நியூசிலாந்து அரசு சிம்பாப்வே பயணத்தை இரத்துச்செய்யுமாறு கிரிக்கெட் சபைக்கு உத்தரவிட்டது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) விதிகளின் படி நியூசிலாந்து தனது பயணத்தை இரத்துச் செய்தால் (இந்திய மதிப்பில்) ரூ.ஒன்பது கோடி அளவுக்கு இழப்பீடு மற்றும் சிம்பாப்வேக்கு ஏற்படும் வருமான இழப்பு ஆகியவற்றை ஈடுசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அதேசமயம் சிம்பாப்வே அரசுடன் விளையாட்டு உறவுகள் இல்லையென நியூசிலாந்து அரசே தனிச்சட்டம் இயற்றினால் இந்தப்பிரச்சினையில் இருந்து தப்பமுடியும். நியூசிலாந்து அரசு இதற்குத் தயாரில்லை. “எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகப் பயணம் செய்ய எங்கள் நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு. சட்டமியற்றி அதை எங்களால் கட்டுப்படுத்தமுடியாது” என்கிறார் நியூசிலாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் பில்கோப். “அப்படியானால் பயணம் சென்றே தீரவேண்டும்.” என்று ஐ.சி.சி அறிவித்து விட்டது. பயணம் இரத்தானால் பல கோடி ரூபா நஷ்ஈடு கொடுக்க வேண்டும். தத்தளிக்கிறது நியூசிலாந்து.

## ஆஷஷ் டெஸ்ட் போட்டி 21 ஆம் திகதி இங்கிலாந்து வீரர்கள் அணி அறிவிப்பு





ஆஷெஷ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தோர்ப் இடம் பெறவில்லை. ஹெவின் பீட்டர்சன் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா -இங்கிலாந்து அணிகள் இடையே ஐந்து டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொண்ட ஆஷெஷ் தொடர் இங்கிலாந்தில் நடக்கிறது. மிகவும் புகழ் பெற்ற தொடரான இந்த போட்டியின் முதலாவது டெஸ்ட் வரும் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை லோட்சில் நடக்கிறது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி எட்ஜ்பாஸ்டனில் ஒகஸ்ட் நான்காம் திகதி முதல் எட்டாம் திகதி வரையும் மூன்றாவது டெஸ்ட் ஓல்ட் டிராப்போர்டில் ஆகஸ்ட் 11 முதல் 15 வரையும் நடக்கிறது.

ஒகஸ்ட் 25ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை டிரென்ட் பிரிட்ஜில் நான்காவது டெஸ்ட்டும், செப்ரெம்பர் எட்டாம் திகதி முதல் 12ஆம் திகதி வரை ஓவலில் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியும் நடக்கிறது.

இதில் கலந்து கொள்ளும் 12 பேர் கொண்ட இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னணி வீரரான கிராம் தோர்ப் அணியில் இடம் பெறவில்லை. இளம்வீரரான ஹெவின் பீட்டர்சன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.ஆஷெஷ் டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணியின் விபரம் வருமாறு;

மைக்கேல் வோகன் (தலைவர்) ரெஸ் கொதிக், ஸ்ரோஸ், இயன்பெல், கெபின், பீற்றர்சன், பிலிண்டொப், ஜோன்ஸ் (விக்கெட் காப்பாளர்) ஆஸ்லேஹைஸ்ஸ் சிமோன்,ஜோன்ஸ், ஹோாங்காட் ஹார்மிசன், கிறிஸ் ரொஸ்ட் ஆகியோரே அணியில் இடம்பெறும் வீரர்களாவர்.



வடக்கு-கிழக்கு பாடசாலைகளுக்கிடையில் வவுனியாவில் நடைபெற்ற மாகாண மட்ட 15 வயதுப் பிரிவு கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட திருமலை மகிந்தபுர சிங்கள மகாவித்தியாலய வீராங்கனைகளையும், கிளி. புனித பற்றிமா றோ.க.வித்தியாலய வீராங்கனைகளையும் படத்தில் காணலாம். இதில், மகிந்தபுர மகாவித்தியாலய அணி சம்பியன் அணியாக தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திற்கு தகுதி பெற்றது.

## அக்கராயன் ம.வி மாணவிக்கு வெள்ளி, வெண்கல பதக்கங்கள்



2005 ஆம் ஆண்டு இளையோருக்கான தேசிய விளையாட்டுப் போட்டியில் அக்கராயன் மகாவித்தியாலய மாணவி சீவரத்தினம் தாரணி வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளார்.

இம் மாதம் 8 ஆம் திகதிமுதல் 10 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியிலேயே அவர் இப்பதக்கங்களை வென்றுள்ளார்.

பரிதி வட்டம் வீசுதலில் 28.47 மீற்றர் வீசி வெள்ளிப்பதக்கத்தையும், குண்டு தள்ளு தல் [illegible]யில் 8.94 மீற்றர் தள்ளி வெண்[illegible]கத்தையும் சுவீகரித்தார்.



# விளையாட்டு

## கல்லூரிகள் மோதும் கால்பந்து, கிரிக்கெட் போட்டி

வடமராட்சிப் பாடசாலைகளுக்கிடையே கிரிக்கெட் விளையாட்டை வளர்க்கும் முகமாக எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் 15 வயதுப்பிரிவினருக்கு இடையேயான கடினப் பந்துப்போட்டியொன்று இடம்பெறவுள்ளது.

நெல்லியடி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டிகளில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைகள் கலந்து கொள்ளவுள்ளன.

இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி என்பன போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன. (41)


## முல்லை .மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான வி.போட்டி

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மெய்வன்மை விளையாட்டுப்போட்டி நிகழ்வு கடந்த புதன்,வியாழனில் துணுக்காய்ப் பிரதேச பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ஆகியோர் கலந்துகொண்டனர். இப்போட்டியில் புதுக்குடியிருப்புப் பிரதேசம் முதலாமிடத்தையும், துணுக்காய்ப்பிரதேசம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இந்நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (21)

## சிந்தனைக்கு



மலைபோல் மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை, எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-07-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## யுத்த நிறுத்த உடன்பாடு மீறல் !

போர்நிறுத்த மீறல் என்பது தனியாக சிறிலங்கா ஆயுதப் படையினரும் விடுதலைப்புலிகளும் ஒருவர்மீது ஒருவர் தாக்குதல் நடாத்துவது மட்டும் தான் என்பதல்ல. போர்நிறுத்த உடன்பாட்டு விதிகளை அமுல் செய்யாமையும், போர் நிறுத்த உடன்பாட்டைப் பாது காக்கும் வகையில் நடந்துகொள்ளாமையும் போர் நிறுத்த மீறலே ஆகும்.

இந்த வகையில் சிறிலங்கா அரசும், அதன் ஆயுதப் படைத்தரப்பும் யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகள் பலவற்றை அமுல் செய்யத் தயாராக இல்லாததோடு, போர்நிறுத்த உடன்பாட்டிற்கு விசுவாசமாகவும் அதன் சீரான அமுலாக்கம் குறித்து அக்கறை கொண்டதாகவும் இல்லை. அவ்வாறு இருந்திருக்குமானால், இன்றைய நொருக்கடி நிலை உருவாகியிருக்க மாட்டாது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி விடுதலைப்புலிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல்செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அனுமதியுண்டு. நிராயுதபாணிகளாக சீருடையின்றி விடுதலைப்புலிகள் இப் பணியில் ஈடுபட முடியும். பிரதேசம் சிறிலங்கா ஆயுதப்படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதினாலும் நிராயுதபாணிகளாக இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் அரசியல் பணியில் ஈடுபடுவதினாலும் புலிகளுக்குரிய பாதுகாப்பு முற்றிலுமாக சிறிலங்கா அரசதரப்பையே சார்ந்தது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இப்பணியை மேற்கொள்ளவில்லை. வடக்கு கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியிலும், வடக்கு கிழககிற்கு வெளியிலும் விடுதலைப்புலிகளுக்கு பாதுகாப்பை அளிப்பதற்குச் சிறிலங்கா தரப்பு தவறியுள்ளது. அவ்வாறு இல்லாது விடில் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியிலும் வடக்கு -கிழக்கிற்கு வெளியிலும் (வெலிக்கந்த போன்ற எல்லைப்பிரதேசங்களில்) விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கமாட்டாது.

இந்நிலையில் விடுதலைப்புலிகள் தமது வடக்கு-கிழக்கிற்கான போக்குவரத்திற்கு பாதுகாப்பு அளிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையும் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு யுத்த நிறுத்த உடன்பாட்டில் அத்தகைய சரத்துஎதுவும் இல்லை என அரசாங்கத் தரப்பு கூறுக்கொள்ள முனைகிறது. இதன்பிரகாரம் அரசாங்கம் புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ளவும், யுத்த நிறுத்தஉடன்பாடு சீரான வழியில் செல்வதற்கு உதவுவதற்கும் தயாராக இல்லை என்றே கொள்ளமுடியும்.

இது ஒரு புறம் இருக்க இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் அரசியல்பணியில் ஈடுபட்டபோராளிகள் மீது இடம்பெற்றுவரும் தாக்குதல்களினால் பல போராளிகள் உயிரிழக்கவேண்டியஅவலம் ஏற்பட்டுள்ளது.

இப்படுகொலைகள் குறித்து கருத்து வெளியிடும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் (அரசியல்வாதிகள்) உச்சபாதுகாப்பு வழங்குகின்றோம். ஆயினும் தாக்குதல்களை முற்றாகத் தடுத்துவிட முடியாது என்கின்றனர். படைத்தரப்பினரோ தாக்குதலுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை விடுதலைப்புலிகள் தம்மீது வீண்பழி சுமத்துவது வாடிக்கையாகிவிட்டது எனத் தெரிவித்துவிடுகின்றனர்.

ஆனால் ஆட்சியாளர்களோ படைதரப்போ இவ்வாறு தட்டிக்கழிப்பதினால்இது அவர்களின் பொறுப்பு இல்லை என்றாகிவிடமாட்டாது. அத்தோடு போர் நிறுத்தஉடன்பாட்டிற்கும் இதற்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்றாகி விடவும் மாட்டாது.

அதாவது அரசாங்கமோ அன்றி சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்போ கூறுவது போன்று இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலுக்கு கருணா குழுவோ அன்றி இனந்தெரியாத ஆயுதக்குழுவோ காரணம் என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. ஏனெனில் அத்தகைய குழுக்களின் பெயரில் சிறிலங்காப் புலனாய்வுத் துறையே இயங்குகின்றது. இதற்கும் மாறாக ஏற்றுக் கொண்டாலும் கூட ஒப்பந்தத்தின் அக்குழுக்களை நிராயுதபாணிகளாக்குவது அன்றி அவர்களை அழித்தொழித்தல் என்பது சிறிலங்கா அரசினது பொறுப்பேயாகும்

ஆனால், சிறிலங்கா அரசோ, அன்றி ஆயுதப்படைத்தரப்போ இத்தகைய செயற்பாட்டைக் கொண்டவையாக இல்லை. அரசாங்கத்தரப்பு போதியளவு பாதுகாப்பு வழங்குகின்றோம், ஆயினும் சில சம்பவங்கள் நடந்து விடுகின்றது எனக் கூறி தமது சக்திக்கு மீறியது எனக் காட்டிக் கொள்ளமுனைகின்றது. ஆயுதப் படைத்தரப்போ இது தம்முடன் சம்பந்தப்பட்ட விடயமல்ல எனக் கூறி இதில் தமக்குப் பங்கோ பொறுப்போ இல்லை எனச் சாதிக்க முனைகின்றது.

ஆனால் அரசாங்கத்தினதும், ஆயுதப்படைத்தரப்பினதும் வாதங்கள் அவை போர் நிறுத்த உடன்பாட்டை மதித்து நடக்கும் நிலையில் இல்லை என்பதையே வெளிக்காட்டுதாய் உள்ளது. அதாவது ஒப்பந்தத்தின் ஒருபகுதி செயற்படமுடியாதவகையில் முடக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அவற்றின் செயற்பாடுகள் உள்ளன.

இந்தவகையில் சிறிலங்கா அரசாங்கத்தினதும் அதன் ஆயுதப்படைத்தரப்பினதும் நடவடிக்கைகள் யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளை பாதுகாப்பதாக இல்லை. ஏற்கனவே உடன் பாட்டின் பல விதிகள் அரசாங்கத்தினால் நிறைவு செய்யப்படாத நிலையிலும் விடுதலைப்புலிகளின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்க சிறிலங்கா அரசும் அதன் ஆயுதப்படைத்தரப்பும் தயாராக இல்லாத நிலையிலும் யுத்த நிறுத்த உடன்பாடு அரசதரப்பால் கடைப்பிடிக்கப்படுகின்றது என எவ்வாறு அர்த்தம் கொள்ளமுடியும்?விடுதலைப் புலிகள் இது குறித்து அக்கறை காட்டாது எவ்வாறு இருக்க முடியும்?

# யுத்த நிறுத்த காலத்தில் நடந்தேறிய கொலைகளுக்கு சனாதிபதியே பொறுப்பு

## உலகத் தமிழ் இந்துக்கள் அமைப்புக் கண்டனம்

யுத்த நிறுத்த காலத்தில் நடந்தேறிய கொலைகள் அனைத்திற்கும் சந்திரிகா அம்மையாரே பொறுப்பு என்று உலகத் தமிழ் இந்துக்கள் என்ற அமைப்புத் தெரிவித்துள்ளது.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது; 2002ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நடந்தேறிய அரச படுகொலைகள், யுத்த நிறுத்த மீறல்கள் அனைத்திற்கும் இராணுவத்திற்கு பொறுப்பாக இருக்கும் சந்திரிகா அம்மையாரே பொறுப்பேற்க வேண்டும். முதலாவது யுத்த நிறுத்த மீறல் கிளாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் பெண் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் பெண் போராளிகள் படுகாயமடைந்தனர். எனினும் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சிங்களச் சிப்பாய்க்கு மனநோய் ஏற்பட்டு விட்டதால் இந்தத் தவறை செய்ததாக அரச படைகள் மழுப்பினர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஜப்பானில் நடைபெறும் போது சீனப் படகுகள் மீது புலிகள் என்ற சந்தேகத்தில் அரச கடற்படைகள் தாக்குதல் மேற்கொண்டது. ஜேர்மனியில் பேச்சுக்கள் இடம்பெறும் போது தீவகப் பகுதியில் கடற்புலிகளின் கடற்கலம் தாக்கியழிக்கப்பட்டது. அதற்கப்பால் வணிகக் கப்பல்கள் இரண்டு உட்பட அனைத்தையும் தாக்கியழித்து விட்டு நாட்டின் நன்மை கருதி இந்த முடிவை எடுத்ததாக சந்திரிகா அம்மையார் அறிக்கை விட்டார்.

லெப்ரினன் கேணல் கௌசல்யன் உட்பட பல போராளிகள் நிராயுதபாணிகளாகக் கொன்று குவிக்கப்பட்டனர். இவற்றிற்கான உத்தரவு சந்திரிகா அம்மையாரிடமிருந்து அரச படைகளுக்குச் சென்றிருக்காவிட்டால் இத்தகைய தாக்குதல்களை அரச படைகள் மேற்கொண்டிருக்க மாட்டாது. இதற்கும் அப்பால் சமாதான காலத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு, அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமை, தாய்லாந்துப் பேச்சுக்களின் போது தமிழீழத் தேசியத் தலைவருக்கு 200 வருட சிறைத்தண்டனை, நீதிமன்றத்தில் சமுகளிக்குமாறு உத்தரவு என சந்திரிகாவின் சதி வலைகளை அடுக்கி கொண்டே போகலாம்.

இதற்கும் அப்பால் சந்திரிகா அம்மையாரின் அடுத்த நடவடிக்கையாக முக்கியமானதும் அதிமோசமானதுமான ஊடகத்துறையினர் நிமலராஜன் முதல் சிவராம் வரையிலான கொலைகள் சந்திரிகா அம்மையாரின் காலத்திலே நடந்தேறியது. இத்தனைக்கும் பின்னர் தனக்குத்தானே சமாதான தேவதை என்ற மகுடத்தை லக்ஷ்மன் கதிர்காமர் என்ற ஒத்து ஊதும் ஊதுகுழலுடன் உலக மட்டத்தில் சூட்டிக் கொள்ள விரும்பும் சந்திரிகா அம்மையார் நவாலி தேவாலயம் முதல் நாகர் கோவில் படுகொலைகள் வரை அனைத்திற்கும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டிய ஒரு கொலைக் குற்றவாளி என்பதே உண்மையாகும்.

# யுத்த சூழல் ஏற்பட இடமளிக்காது பிரச்சினைக்கு விரைவான தீர்வு அவசியம்

## - மட்டு.மங்கள ராமய விகாராதிபதி அழைப்பு

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைப் பொறுத்த வரை மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாதவாறு சிறிலங்காவின் அனைத்துத் தலைவர்களும் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி வண. அம்பிட்டியே சுமனரத்ன தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட சகல அரசியல் கட்சித் தலைவர்களும் பேசி இப் பிரச்சினைக்கு விரைவானதொரு தீர்வைக் காண வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது உருவாகியுள்ள பதற்ற நிலை குறித்து தனது கவலையை வெளியிட்டுள்ள அவர் இதற்கான பொறுப்பை பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறியதாவது:

கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் யுத்தம் பற்றிய அச்சமும் சந்தேகமும் காணப்படுகின்றது. என்ன நடக்கப் போகின்றதோ என மக்கள் குழம்பிப் போயிருக்கின்றார்கள். இப்படியான நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

கடந்த மூன்று வருடங்களாக வடக்கு கிழக்கில் நிலவிய அமைதி காரணமாக சிங்கள மக்கள், வடக்கு கிழக்கிற்கு சுதந்திரமாகச் சென்று திரும்பக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. தமிழ்-சிங்கள மக்களிடையே புரிந்துணர்விலும் நட்புறவிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. இதனால் பொருளாதாரமும் அபிவிருத்தியடைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளினாலோ தமிழ் மக்களினாலோ எமக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை. அரசியல் தலைவர்கள் தைரியமாக பேசி முடிவுகளை எடுக்க பின்நிற்பதால் தான் இப்படியான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஒரு பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காணும்போது மற்றுமொரு தரப்பு முட்டுக்கட்டைகளை போடுகின்றது. இவை அரசியலில் இயலாத தன்மையை காட்டுகின்றது.

அண்மைக்கால சம்பவங்கள் நாட்டில் யுத்த சூழ்நிலை தொடர்பான அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றன.

அரசாங்க கட்டுபாட்டுப் பகுதி ஊடான தமது பயணத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாப்பு கேட்டுள்ளார்கள். இது தொடர்பாக அரசாங்கம் அளித்துள்ள பதில் அவர்களினால் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிகின்றது.

தற்போது இதனால் உருவாகியுள்ள நெருக்கடி நிலையைப் பொறுத்தவரை மீண்டும் யுத்த சூழ்நிலை ஏற்பட இடமளிக்காதவாறு நாட்டுத் தலைவர்கள் என்ற ரீதியில் இந்தப் பிரச்சினைக்கு விரைவான தீர்வொன்றை பேச்சுவார்த்தை மூலம் காண வேண்டிய பொறுப்பு சகல அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் உண்டு.

அப்படி தவறும் பட்சத்தில் கடந்த காலம்போல் மீண்டும் ஒரு யுத்தத்திற்கு நாடு தள்ளப்படலாம். இதனால் ஏற்படும் விளைவு கடந்த காலங்களை விட மிகவும் மோசமானதாகக் கூட இருக்கலாம் என்றார் அவர்.

# பல்கலை கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கிறது

## 60 ஆயிரம் மாணவர் கல்வி பாதிப்பு

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 28 ஆம் திகதியிலிருந்து இப்போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

இலங்கையின் 13 பல்கலைக் கழக வளாகங்களில் கல்விசாரா ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு நடத்தும் வேலை நிறுத்தப் போராட்டத்தால் இலங்கையின் 13 பல்கலைக்கழக செயற்பாடுகளும் முடங்கி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்விசாரா ஊழியர் தொழிற் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் லயனல் மல்வத்தக கூறுகையில், எமது பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வுகாண வேண்டும். அரசு தலையிட மறுத்தால் தற்போதும் கூட தமது அமைப்பினர் மேற்கொண்டு வரும் பல்கலைக்கழக அத்தியாவசிய சேவைகளை உடனே நிறுத்தி விடுவோம் என்றும் அவர் எச்சரித்தார்.

இப்போராட்டம் குறித்து கூறிய பல்கலைக்கழக மானியக் குழு தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ், ஊழியர்களின் கோரிக்கை தொடர்பான பரிந்துரைகள் தேசிய சம்பள ஆணையத்தின் தலைவர் திஸ்ஸ தேவேந்திர தலைமையிலான குழுவின் பரிந்துரைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் இதில் தமது மானியக்குழு தலையிட முடியாது என்றார்.

பல்கலைக்கழகச் செயற்பாடுகள் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக நேற்று அனைத்துப் பல்கலைக்கழக உபவேந்தர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டதாகவும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோருக்கு மாற்றாக தற்காலிகமாக பட்டதாரிகளை பயிற்சிக்கு அனுப்பி பணியில் அமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தால் இலங்கை பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும 60 ஆயிரம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளதாக கூறப்படுகிறது. ஏற்கனவே திறந்த பல்கலைக் கழகத்தில் நடைபெறவிருந்த தேர்வுகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளன. கல்விசாரா ஊழியர்கள் போராட்டம் நடைபெற்று வரும் நிலையில் பல்கலைக்கழக மானியக் குழுவின் அலுவலகத்திற்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.







இயக்கச்சியில் நடைபெற்ற லெப்.சீலன் நினைவு நிகழ்வில்.....

# முதல் தாக்குதல் தளபதி லெப்.சீலனின் 22-ஆம் ஆண்டுநினைவு நிகழ்வுகள்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் தாக்குதல் தளபதியாக இருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். சீலன் அவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

நேற்று மாலை 5.45 மணியளவில் இயக்கச்சிப் பகுதியில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் பணிமனை துணைப்பொறுப்பாளர் அர்ச்சுனா ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றி வைத்தார். சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் கொடியை சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு சிறப்புத் தளபதி லெப். கேணல் நகுலன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து லெப். சீலன் அவர்களின் திருவுருவப்படத்திற்கான சுடரை கட்டளைத் தளபதி கேணல் ரமேஸ் ஏற்றி வைத்தார். சீலன் அவர்களின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையை கிட்டு பீரங்கிப் படையணி சிறப்புத் தளபதி மணிமாறன், குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கோபால் ஆகியோர் அணிவித்தனர். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி மாவீரர்களின் பொது உருவப் படத்திற்கு படையத் தொடக்கப் பயிற்சிப் பள்ளிகளின் பொறுப்பாளர் கேணல் ஆதவன் சுடர் ஏற்றி வைத்தார். அதற்கான மலர்மாலையை லெப். கேணல் பொன்னம்மான் கண்ணி வெடிப்பிரிவு சிறப்புத் தளபதி அஸ் வினி, மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் அணிவித்தனர்.

அடுத்து படையணித் தளபதி அமிர்தாப் தலைமையில் மேடை நிகழ்வுகள் ஆரம்பமானது. இதில் வரவேற்புரையை படையணிப் போராளி பரதன் நிகழ்த்தினார்.

லெப்.சீலன் அவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவாக படையணிப் போராளிகளிடையே நடத்தப்பட்ட இராணுவ, பொதுவிளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களும் கேடயங்களும் வழங்கப்பட்டன.

இவற்றை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம்,லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவு தளபதி உமையாள், தமிழீழ கடற்படைத் தளபதி மங்களேஸ், குட்டி சிறி மோட்டார் படையணி மகளிர் தளபதி அமுதா. சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி புஸ்பநாதன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

நிகழ்வில் சிறப்புரையை தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளரும், மூத்த தளபதியுமான பொட்டம்மான் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் உருவாக்கத்தில் உருவான "தீயில் எழும் தீரம்" என்ற இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இறுவட்டினை சாள்ஸ் அன்ரனி படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் நகுலன் வெளியிட்டு வைக்க, புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டம்மான் பெற்றுக் கொண்டார். அதனை அடுத்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெற்றது. கலைஞர்களை புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பரிசில் வழங்கி கௌரவித்தார். நிகழ்வின் நிறைவில் படையணியின் இசைக்கச்சேரி இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் உட்பட பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (லோ)

# மக்கள் மீதான கெடுபிடிகளை நிறுத்த புலிகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசியல்துறையினருக்கும்-இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் அதிகாரிகளுக்குமிடையேயான முக்கிய சந்திப்பு ஒன்றுயாழ்.மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றது.

இதில் புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணன், ஊடக இணைப்பாளர் இமயவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கண்காணிப்பு குழுத்தரப்பில் இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவைச்சேர்ந்த அனால் வால்வ் தலைமையிலான அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் வடக்கு கிழக்கில் நிலவுகின்ற பதற்றமான சூழ்நிலையால் யாழ்.மாவட்டத்தின் மக்களி டையே ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது யாழ்.குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை மக்களை பெரிதும் பீதி கொள்ளவைத்துள்ளது. இதற்கு இராணுவக் கெடுபிடிகளே காரணம்.

எனவே பொது மக்களைப் பீதி கொள்ளவைக்கும் விதத்திலான கெடுபிடிநடவடிக்கைகளை இராணுவம் கைவிடவேண்டுமென யாழ். மாவட்டஅரசியல்துறையினர் கண்காணிப்புக் குழு அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளனர். (33)

# "பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்" அறிமுகவிழா மண்டபம் இடமாற்றம்

இன்றுமாலை 3.30மணிக்கு கிளிநொச்சிபண்பாட்டு மண்டபத்தில் எழுகலை இலக்கிய பேரவை நடத்தவிருந்த கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் நூலுக்கான அறிமுக விழா கிளிநொச்சி மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென ஏற்பாட்டாளர்கள் அறிவிக்கின்றனர். இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் அறிமுக விழாவில் நூலுக்கான அறிமுகவுரையினை யோகரட்ணம் யோகி அவர்களும், மதிப்பீட்டுரைகளை கலாநிதி சோமாஸ்கந்தன், பு. சத்தியமூர்த்தி ஆகியோரும் ஏற்புரையினை புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்தவுள்ளனர். (லோ.தீ)

# அரசு 5 ஆண்டுகள் பதவியிலிருக்கும் அடுத்த ஆண்டே சனாதிபதித் தேர்தல்!

## - சனாதிபதி கூறுகின்றார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு பதவியிலிருக்கும் என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்..

அரசாங்கத்தில் பொதுமக்களுக்கு நம்பிக்கை இருப்பதால் அரசாங்கம் இன்னும் பலமானதாக இருக்கும் என்று மாத்தளையில் நேற்று இடம் பெற்ற கூட்டமொன்றில் கருத்து வெளியிட்டார். சனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டிலேயே நடத்தப்படும் என்று அவர் கூறினார். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இனத் தகராறே முக்கிய பிரச்சினை ஆகும். ஆட்சிக்கு வரும் அனைத்து அரசாங்கங்களும் இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

## இனம்...

முஸ்லிம்கள் இருவரும் அடங்குவர்.கொல்லப்பட்டவர்கள் அக்கரைப்பற்றைச் சேர்ந்த முகமட் நசார், அப்துல் லதீப் ரவாஸ் ஆகிய இரு முஸ்லிம்களும் வீரச்சேனை பளுகாமத்தைச் சேர்ந்த குபேந்திரன் என்ற தமிழ் இளைஞருமே என அடையாளம் காணப்பட்டுள்ளது. அப்துல் லதீப் ரவாஸ் என்ற இளைஞர் பாராளுமன்றஉறுப்பினர் அதாவுல் லாவின் தீவிர ஆதரவாளர் எனவும் மற்றைய முஸ்லிம் முச்சக்கர வண்டிச்சாரதிஎனவும் அறியப்படுகின்றது.

## கொழும்பு...

தெரிவிக்கின்றனர். இதேவேளை புலிகளின் காலக்கெடு முடிவை வடைந்தமையே இவ் ஏற்பாடுகளுக்கு காரணமாயிருக்கலாமென வேறொரு தரப்பினர் கூறுகின்றனர். (32)

## ஆழிப்பேரலை...

விதமான சட்டமீறல்களும் இல்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது; நாட்டின் தலைவி என்ற அடிப்படையில் சனாதிபதிக்கு எந்தவொரு பிரிவினருடனும்

ஒப்பந்தங்களைச் செய்வதற்குப் பூரண அதிகாரம் உண்டு. விடுதலைப் புலிகள் அமைப்பும் தேவையான வகையில் எந்தப் பிரிவினருடனும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்குச் சுதந்திரங்களைக் கொண்டது.

ஆனால் பொதுக்கட்டமைப்பு நிதியம், பிராந்திய குழுவினர் தலைமையகம் கிளிநொச்சியில் செயற்படுவது, மீளமைப்புத் திட்டங்களுக்குப் பிரதேச குழுக்கள் ஒப்புதல் அளிப்பது மற்றும் நடைமுறைப்படுத்துவது ஆகியவற்றில் சிக்கல்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப் படுவதாக அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வழக்கின் அடுத்தகட்ட விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (32)

# வவு.வில் இராணுவக் கெடுபிடி அதிகரிப்பு போ.நி.க.குழுவிடம் புலிகள் முறையீடு

(செட்டிகுளம்)

வவுனியாவிலும் சிறிலங்கா இராணுவத்தினர் தமது கெடுபிடிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளார்கள் என்றும் வவுனியா மாவட்டத்தில் அரசியல் பணிபுரிந்துவரும் அரசியல் போராளிகளினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் ஞானம் நேற்று வவுனியா மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்பு குழு பிரதித் தலைவர் அன்னியுடனான சந்திப்பில் கேட்டுக் கொண்டார்.

மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் இது பற்றித் தெரிவிக்கையில்;

நேற்று மாலை மூன்று மணியளவில் வவுனியா மாவட்ட அரசியல் துறை காரியாலயத்தில் நடை பெற்ற இந்தச் சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் சம்பவங்களுடன் பார்க்கின்ற போது இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் அரசியல் பணிகளை செய்து வரும் போராளிகளுக்கு பாதுகாப்பற்ற நிலை ஒன்று ஏற்பட்டு இருப்பதாகவும், இந்த நிலை தொடருமானால் தமது அரசியல் பணியினை சீராக முன்னெடுத்து செல்ல முடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் ஏற்கனவே விடுதலை புலிகளின் காரியாலயத்தின் மீது இரண்டு முறை கைக்குண்டு தாக்குதல் இடம்பெற்றமையும் வேப்பங்குளம் பகுதியில் அரசியல் போராளிகள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட விடயங்களையும், தற்போது திருகோணமலையில் இடம் பெற்று வரும் சம்பவங்களையும் பார்க்கின்ற போது இந்த பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் ஞானம் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் மீண்டும் வீதியால் போய்வரும் மக்களை சோதனை செய்வதாகவும் இராணுவத்தினரது நடமாட்டம் மீண்டும் படுமோசமாக அதிகரித்து இருப்பது தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் தமது அரசியல் போராளிகள் தமது தேவைகளை கருதியும் தலைமையகத்திற்கு போகின்ற போதும் இராணுவத்தினர். கெடுபிடிகள் எதனையும் ஏற்படுத்த கூடாது என்றும் கேட்டுக்கொண்டதாகவும் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் பணியாற்றி வரும் போராளிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரும்புப் பாலத்தில் தொடர் விபத்துக்கள்!

கைதடியில் புதிதாக அமைக்கபட்ட இரும்புப் பாலத்தில் நேற்றுக் காலை எட்டு மணியில் இருந்து பன்னிரண்டு மணிக்குள் ஏழு உந்துருளிகளும், ஒரு உழவு இயந்திரமும், வான் ஒன்றும் விபத்துக்குள்ளானதாக தெரியவருகிறது.

மழை தூறிக்கொண்டே இருந்ததால் வாகனங்கள், உந்துருளிகள் வழுக்கிச் சென்று பாலத்தின் மீது மோதியுள்ளதாக தெரிய வருகிறது. இதில் பயணம் செய்த பயணிகள் சிறு காயங்களுக்கு உள்ளானதாக தெரியவருகிறது. (28)

## சுனாமி...

தடை உத்தரவின் பின்னர் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக அரசும், புலிகளும் தொடர்ந்தும் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கலாமே தவிரவேறொன்றும் செய்ய முடியாது. இது எங்களுக்குக் கிடைத்த முதல் வெற்றி. அத்துடன் இந்தத் தடைஉத்தரவானது நல்லதொரு இறுதித் தீர்விற்கு உரிய அடையா ளமாகுமெனவும் அவர் கூறியுள்ளார்.

## கைக்குண்டு வீச்சு

தெஹிவளை கல்கிசை நகர சபை மேயரின் இல்லத்தின் மீது நேற்றிரவு 8.00 மணியளவில் இனம் தெரியாத நபர்கள் கைக்குண்டொன்றை வீசியுள்ளனர்.

எனினும் இந்தக் குண்டு வீச்சினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் வீட்டிற்கு சிறுசேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டு வீச்சிற்கான காரணம் என்ன என்பது குறித்து இதுவரை தகவல் எதுவும் வெளியாகவில்லை. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.